Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 கதிர் : 193 | செவ்வாய்க்கிழமை 07 ஜூன் 2022 | வைகாசி 24 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 விலை : ரூ. 50

விரிவு :- பக்.15

**ரின் மீன் விலை உயர்வு**

**ஓமானிலிருந்து வருகிறது யூரியா**

**டீசல் விநியோகம் நேற்று ஆரம்பம்**

**இந்தியாவின் உபயத்தால் மீண்டும் திரிபோஷா!**

**இலங்கைக்கு உ.கிழங்கு; பங்களாதேஷ் வழங்கும்!**

**எரிபொருள் விலை அதிகரிப்பு ஒத்திவைப்பு**

**எரிவாயுக் கப்பல் நாட்டை வந்தடைவு**

**சிமெந்து விலையும் அதிகரிப்பு**

# 21ஆம் திருத்தச் சட்ட வரைவு காலைவாரியது அமைச்சரவை

## மீண்டும் அடுத்தவாரம் சமர்ப்பிப்பு

கொழும்பு, ஜூன் 7

அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகளால் முன்வைக்கப்பட்ட திருத்தங்களையும் உள்ளடக்கிய வகையில் நேற்று முன்வைக்கப்பட்ட 21ஆவது திருத்தச்சட்ட வரைவுக்கு, அமைச்சரவை அனுமதி வழங்கவில்லை. இதனால் 21 ஆவது திருத்தச்சட்டவரைவை நிறைவேற்றுவதில் இழுபறி தொடர்கின்றது. 21 ஆவது திருத்தச்சட்ட வரைவிலுள்ள சர்ச்சைக்குரிய சில விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து, இணக்கப்பாட்டை ஏற்படுத்திய பின்னர், அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் அது சம்பந்தமாக முடிவெடுக்கலாம் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 15 ➤

## தோற்றுப்போன ஜனாதிபதியாக பதவியில் இருந்து விலகேன்!

மீண்டும் போட்டியிடமாட்டேன்: பதவிக்காலம் முடிய முன்னரும் விலகமாட்டேன் என்கிறார் கோத்தா



கொழும்பு, ஜூன் 7

தோல்வியடைந்த ஜனாதிபதியாக நான் பதவி விலகத் தயாரில்லை என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

செய்தி நிறுவனம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்ட 15 ➤

மே 9 வன்முறை

## மஹிந்தவின் செயலர் நேற்றுக்கைதாகினார்

கொழும்பு, ஜூன் 7

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இணைப்புச் செயலர் ஒருவர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

காலிமுகத்திடல் மற்றும் கொள்ளுப்பிட்டி பகுதிகளில் கடந்த மே 9 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் விசா 13 ➤

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு

## 8 எரிபொருள் நிலையங்களில் இன்று மண்ணெண்ணெய்

மாவட்டச் செயலர் மகேசன் தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு நேற்றுக் கிடைக்கப்பெற்றுள்ள 33 ஆயிரம் லீற்றர் மண்ணெண்ணெய் 8 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாக இன்றைய தினம் விநியோகிக்கப்படவுள்ளது என்று மாவட்டச்செயலர் க.மகேசன் தெரிவித்தார்.

இந்த விநியோகம் தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்டச்செயலகத்தில் 15 ➤

## ஆஸி. - இலங்கை கிரிக்கெட்; முழு வருமானமும் நாட்டுக்கு

சிறிலங்கா கிரிக்கெட் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 7

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் இலங்கை சுற்றுப்பயணத்தின்மூலம் இலங்கைக்கு 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் கிடைக்கும். அது பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள மக்களுக்கு உதவுவதற்காக ஒப்படைக்கப்படும் என்று சிறிலங்கா கிரிக்கெட் தெரிவித்துள்ளது. 15 ➤

**முச்சந்தி முரளி**



"இனிமேல் ஒவ்வொரு நாளும் எந்தெந்த பொருள் விலையே றேலை எண்டு சொல்லுறதுதான் ஈஸியா இருக்கும் பாருங்கோ..."

## அத்தியாவசிய பொருள்கள் திருடிய சிறுவர்கள் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 7

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நாரந்தனை தெற்கு பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு கடை உடைத்து அத்தியாவசியப் பொருள்களைத் திருடிய குற்றச்சாட்டில் 14 மற்றும் 15 வயது 15 ➤

## தொடரும் துப்பாக்கிச்சூடு நேற்றும் ஒருவர் உயிரிழப்பு

4 நாள்களில் 5 பேர் சாவு

கொழும்பு, ஜூன் 7

கொழும்பு முகத்துவாரம் (மோதர), ரெட்பானா வத்த பகுதியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார். சம்பவத்தில் 23 வயதான இளைஞரொருவரே 13 ➤

## விதிக்கப்பட்ட தடையை இடைநிறுத்தியது மன்று!

நேற்று மாலையே பறந்து போனது 'ஏரோப்ளோட்'

கொழும்பு, ஜூன் 7

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து ரஷ்யாவின் ஏரோப்ளோட் விமானம் புறப்படுவதற்கு 13 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்கள், மாணவர்கள் வீதிகளில் போராட நேரிடும்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

**யாழ்ப்பாணம், ஜூன் 7**

**அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர் மாணவர்கள் என அனைவரும் 'பாடசாலைக்கு போகமாட்டோம்' என்ற கோசத்தோடு வீதியில் இறங்கும் நிலை ஏற்படும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் சரா புவனேஸ்வரன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

பாடசாலைகளை இயக்குதல் தொடர்பாக எம்மால் முன்வைக்கப்பட்ட இலகு பொறிமுறையை நடைமுறைப்படுத்துங்கள் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சரிடம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவுக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் சரா புவனேஸ்வரன் மீண்டும் நேற்று அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

போக்குவரத்து சீரில்லை, மாணவரின் போசணைக்கு வழியில்லை, ஆசிரியர்களின் பயணத்துக்கு மார்க்கமில்லை. இதற்கு மேலதிகமாக இன்னும் பல கஷ்டங்கள். இவை எல்லாவற்றையும் கருத்தில் கொண்டு பாடசாலைகளை நடத்தி மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை முறையாக முன்னெடுக்க இன்றைய காலத்துக்குப் பொருத்தமான இலகுவான பொறி முறைகளை முன்வைத்தோம். ஆசிரியர்களை சுழற்சி முறையில் அழைத்தல், பாட நேரங்களை அதிகரித்தல், ஆரம்ப வகுப்புக்களுக்கு சுழற்சி முறையில் நாள்களைத் தெரிவு செய்தல், மாணவர்களை கிரமமாகப் பாடசாலைக்கு வரவழைக்க மதிய போச னம் வழங்குதல், தூர இடங்களுக்கு கடமைக்குச் செல்லும் ஆசிரியர்களுக்கு பயணச் செலவில் அரைவாசியை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளல் போன்றவற்றை உடனடியாக நடைமுறைப்படுத்தாவிட்டால் எல்லோரின் மனநிலையிலும் விரக்தி ஏற்பட்டு இளையோர் வீதியில் இறங்கியதுபோன்று அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் என அனைவரும் வீதியில் இறங்கும் நிலை ஏற்படும் - என்றுள்ளது. (எ-20)

## ரஷ்யாவுக்குத் தபால் அனுப்புவதற்கு தடை

கொழும்பு, ஜூன் 7

ரஷ்யாவைச் சேர்ந்த விமானம் ஒன்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் நீதிமன்ற உத்தரவுப்படி தடுத்து நிறுத்தப்பட்டுள்ள நிலையில், ரஷ்யாவுக்கு தபால் பொருள்கள் அனுப்புவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

ரஷ்யா விமான சேவைப் பிரச்சினை தீர்க்கப்படும் வரையில் நாடளாவிய ரீதியில் உள்ள தபால் நிலையங்களில் விமான அஞ்சல் மூலம் ரஷ்யாவுக்கு அனுப்பப்படும் தபால் பொருள்கள் ஏற்றுக்கொள்ளப்படாது என்று தபால் மா அதிபர் தெரிவித்துள்ளார். அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். (எ-இ)

## மோ.சைக்கிள்– சைக்கிள் விபத்தில் இருவர் காயம்

சாவகச்சேரி, ஜூன் 7

மோட்டார் சைக்கிள் - சைக்கிள் ஆகியன ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்கு உள்ளானதில் இருவர் காயமடைந்தனர். இந்த விபத்து வரணியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

விபத்தில் வரணி கரம்பைக் குறிச்சியைச் சேர்ந்த பொன்னர் மகாலிங்கம் (வயது-67), நாகர்கோவில் மேற்கைச் சேர்ந்த கணேசலிங்கம் லம்போசிகன் (வயது-23) ஆகியோரே காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (ம-14,9)

## மத்திய வங்கி ஆளுநருடன் விரோதம் எதுவும் இல்லை!

### பிரதமர் அலுவலகம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 7

மத்திய வங்கி ஆளுநருடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எந்தவித விரோதங்களும் இல்லை என்று பிரதமர் அலுவலகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்கவுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனிப்பட்ட விரோதங்களை கொண்டுள்ளார் என்று தகவல்கள் வெளியாகின. அதன் காரணமாக அவரை விலக்கிவிட்டு தினேஷ் வீரக்கொடியை புதிய ஆளுநராக நியமிப்பதற்கு ரணில் முயற்சிக்கிறார் என்றும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்தச் செய்திகள் பொய்யானவை எனவும் அடிப்படை ஆதாரமற்றவை எனவும் பிரதமர் அலுவலகம் மறுத்துள்ளது. நந்தலால் வீரசிங்கவுடன் தனிப்பட்ட ரீதியிலோ அல்லது உத்தியோகபூர்வ ரீதியிலோ பிரதமருக்கு எந்தவித விரோதங்களும் இல்லை எனவும் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, மத்திய வங்கி ஆளுநர் பதவி தொடர்பில் தனது பெயர் தொடர்புபடுத்தப்படுவது குறித்து தினேஷ் வீரக்கொடியும் மறுப்புச் செய்தி வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-இ)

## சிவசிதம்பரத்தின் நினைவுதினம் நெல்லியடியில் கடைப்பிடிப்பு





யாழ்ப்பாணம், ஜூன் 7

சிவசிதம்பரத்தின் 20 ஆவது ஆண்டு நினைவுதினம் நெல்லியடியில் இடம்பெற்றது.

நினைவு தினத்தை முன்னிட்டு, நெல்லியடி பேருந்து நிலையத்தின் முன்னால் அமைந்துள்ள அவரது திருவுருச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு, சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், சட்டத்தரணி மகிந்தன் உள்ளிட்ட பலர் அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டனர். (ம-14)

## மாணவர் சீருடைக்கு சீனாவிடம் தஞ்சம்!

கொழும்பு, ஜூன் 7

பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகள் மற்றும் பாடநூல் புத்தகங்கள் தொடர்பில் சீனா மற்றும் இந்தியாவின் உதவியைக் கல்வி அமைச்சு கோரியுள்ளது என்று கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் ஹேமந்த பிரேமதிலக்க தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களுக்கான சீருடைத் துணிகளை வழங்கத் தேவையான துணிகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பாகச் சீனாவுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல் வெற்றிபெற்றுள்ளது என்றும், தேவைப்படும் துணியில் பாதியளவு துணியை தந்துதவ சீனா இணங்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று பாடநூல்களை அச்சிடுவதற்குத் தேவையான கடதாசியை இந்தியாவிலிருந்து கடன் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப் பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## மைத்திரிபால சிறிசேனவுக்கு கட்சி உறுப்பினர்கள் எதிர்ப்பு

கொழும்பு, ஜூன் 7

சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு, கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோரைக் கட்சியின் உள்ளகக் கலந்துரையாடலுக்கு அழைத்ததாலேயே இந்த எதிர்ப்பு வெடித்துள்ளது.

அரசாங்கத்தில் இணைந்து அமைச்சரவை அமைச்சர்களாக நிமல் சிறிபால டி சில்வா மற்றும் மஹிந்த அமரவீர பதவியேற்றதன் பின்னர் அவர்களைக் கட்சியின் அனைத்துப் பதவிகளில் இருந்தும் நீக்குவதற்கு கட்சி தீர்மானித்துள்ள நிலையில், கட்சியின் உள்ளகக் கலந்துரையாடலுக்கு அவர்களை மீண்டும் அழைப்பது ஏன்? என மைத்திரிபால சிறிசேனவிடம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். அத்துடன் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை கட்டியெழுப்பத் தவறிய மைத்திரிபால சிறிசேன, தற்போது அதனை எவ்வாறு கட்டியெழுப்ப முடியும் எனவும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-14,இ)

## வெள்ளை வான்களுக்குப் பதில் தற்போது மோட்டார் சைக்கிளா?

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் ஆவேசம்



கொழும்பு, ஜூன் 7

கடந்த காலங்களில் வெள்ளை வான்களைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட கொலைகள் தற்பொழுது மோட்டார் சைக்கிள்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்றனவா? என எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

[illegible] செய்யப்படும் பயங்கரமான சம்பவங்கள் நாட்டின் பல பகுதிகளிலும் பதிவாகின்றன. வீதிகளில் மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்படுகின்றது. இதுவா ஜனாதிபதி உறுதியளித்த தேசியப் பாதுகாப்பு?

இவ்வாறு கொல்லப்பட்டவர்களில் சிலர் முக்கியமான வழக்குகளின் அரச சாட்சியாளர்கள். பெரும் குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களின் குற்றங்களை நிரூபிக்கும் சாட்சியாளர்களே இவ்வாறு படுகொலை செய்யப்படுகின்றனர். பாதாள உலகக் குழுவின் பயங்கரவாதப் போக்கை இந்த அரசாங்கம் உறுதிப்படுத்தியுள்ளதா? என்று எண்ணவேண்டி உள்ளது - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எரிபொருள் தட்டுப்பாடு மீள ஏற்படும் அபாயம்!

## துறைசார் அதிகாரிகள் சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஜூன் 7**

**இந்தியக் கடனுதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட எரிபொருள் முடிவடையும் தறுவாயில் உள்ளதால் மீண்டும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.**

இந்தியக் கடனுதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட எரிபொருள் காரணமாகக் கடந்த மாதம் இலங்கையில் ஏற்பட்ட எரிபொருள் தட்டுப்பாடு ஓரளவுக்குச் சீர்செய்யப்பட்டது.

அதற்கு முன்னர் எரிபொருள் நிரப்பிய கப்பல்கள் கொழும்பு துறைமுகத்துக்கு வந்து தமக்கான கட்டணத்தை டொலரில் பெற்றுக் கொள்ளும்வரை நாள் கணக்கில் துறைமுகத்தில் காத்திருக்க நேர்ந்ததால் தாமதக் கட்டணம் பெருளவில் செலுத்த நேர்ந்திருந்தது.

இந்தநிலையில் இந்தியக் கடனுதவித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் எரிபொருள் நிரப்பிய கடைசிக் கப்பல் எதிர்வரும் 16ஆம் திகதி இலங்கையை வந்தடையவுள்ளது. அத்துடன் இலங்கைக்கான இந்தியக் கடனுதவித் திட்டம் முடிந்து விடும்.

இலங்கையின் டொலர் கையிருப்பு கடுமையான பற்றாக்குறையில் காணப்படும் நிலையில் புதிதாக டொலரைத் தேடிக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படாது போனால் மீண்டும் எரிபொருள் பற்றாக்குறை தீவிரமாக ஏற்படும் அபாயம் உள்ளது என்று எரிபொருள் கூட்டுத்தாபன அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். (எ-இ)





மட்டக்களப்பில் சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நேற்று டீசல் விநியோகிக்கப்பட்ட நிலையில், பொது மக்கள் மிக நீண்ட வரிசையில் நின்று தமது வாகனங்களுக்கு டீசலை நிரப்பிக் கொண்டனர். (ம-150)




# லிட்ரோ எரிவாயு சிலிண்டர் விலைகள் அதிகரிக்காது!

## நிறுவனம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 7

லிட்ரோ எரிவாயு விலை அதிகரிக்கப்படவுள்ளது என சமூகவலைத்தளங்களில் வெளியாகும் செய்திகளை லிட்ரோ நிறுவனம் நிராகரித்துள்ளது. எரிவாயு சிலிண்டர்களின் விலைகளை அதிகரிப்பது தொடர்பாக தீர்மானம் எடுக்கப்படவில்லை என லிட்ரோ நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

12.5 கிலோகிராம், 5 கிலோகிராம் மற்றும் 2.3 கிலோ கிராம் எடையுள்ள சமையல் எரிவாயு சிலிண்டர்கள் நாளைமறுதினம் (நாளை) புதன் கிழமைவரை விநியோகிக்கப்படமாட்டாது.

கையிருப்பில் போதியளவு சமையல் எரிவாயு இல்லாமையால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. 2 ஆயிரம் மெற்றிக் தொன் எரிவாயுவை ஏற்றிய கப்பலொன்று தற்போது கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ள நிலையில், அவற்றைத் தரையிறக்கும் செயற்பாடுகளை மேற்கொள்ளும் நடவடிக்கை இடம்பெறவுள்ளது - என்றார். (எ)

# சர்வதேச சந்தையில் நேற்று தங்கத்தின் விலை வீழ்ச்சி!

கொழும்பு, ஜூன் 7

சர்வதேச சந்தையில் தங்கத்தின் விலை சற்றுக் குறைவடைந்துள்ளது.

சர்வதேச சந்தையில் ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை நேற்றுமுன்தினம் 18 டொலரால் குறைவடைந்து 851 டொலராகக் காணப்பட்டது.

இதேவேளை நேற்றுமுன்தினம் கொழும்பில் 24 கரட் ஒரு பவுண் தங்கம் ஒரு லட்சத்து 87ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது.

அத்துடன் 22 கரட் தங்கம் ஒரு லட்சத்து 73 ஆயிரம் ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டது என தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# வெளிநாட்டுப் பணத்தை கடத்த முற்பட்டவர் கைது

கொழும்பு, ஜூன் 7

சட்டவிரோதமாக வெளிநாட்டுப் பணத்தைக் கடத்திச் செல்ல முற்பட்ட இந்திய நபரொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து 1 லட்சத்து 17 ஆயிரம் கனேடிய டொலர் மற்றும் 19 ஆயிரம் யூரோ கைப்பற்றப்பட்டன.

இதனையடுத்து குறித்த சந்தேகநபரைக் கைதுசெய்ததுடன் அவரிடமிருந்த வெளிநாட்டுப் பணம் சுங்கத் திணைக்களத்தால் பறிமுதல் செய்யப்பட்டதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-14)




ரஷ்யாவின்ர பிளேனை போகவிடாமல் மறிச்சு வைச்சதால இலங்கைக்கு பெரும் பிரச்சினையாப் போட்டுது எண்டுதான் எல்லாரும் கதைக்கினம். இப்பிடி ஒரு வல்லரசு நாட்டின்ர பிளேனை தடுத்து வைச்சால் அது பெரும் சிக்கலில கொண்டுபோய் விடுமெண்டு சின்னபிள்ளைக்கே தெரியும். அப்பிடியிருக்க இது ரணிலுக்கோ , கோத்தாவுக்கோ தெரியாமல் போயிருக்காது. ஏனெண்டால், இயற்கைப் பசளையோட வந்த சீனக்கப்பலோட சீண்டினதாலதான், இப்ப இலங்கையை பெரிசா சீனா கண்ணெடுத்தும் பாக்கிறேலை. அப்பிடியிருக்க, இப்பிடிப்பட்ட நெருக்குவார நிலைமையில ரஷ்யாவோட முட்டிமோத வெளிக்கிட்டது எவ்வளவு பெரிய முட்டாள்தனம்.

ஆனாலும் எல்லாரும் நினைக்கிற மாதிரி, மோட்டுத்தனமா இந்த முடிவை ரணில் தரப்பு எடுக்கேலை எண்டு அங்கத்தை சில தகவல்கள் சொல்லுது. இப்ப இலங்கைக்கு தேவை ரஷ்யா இல்லை. சர்வதேச நாணய நிதியமும், உலக வங்கியும் தான். இந்த ரண்டு அமைப்பும் மனம் வைச்சால் தான் இலங்கையின்ர டொலர் பிரச்சினை கொஞ்சமெண்டாலும் தீரும். ஆனால் இலங்கை முதலே போகாமல் இழுத்தடிச்சுப் போட்டு, இப்ப கடைசிக் கந்தாயத்தில போனதால உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் பெரும் புறியம் காட்டுகினம். அதாலதான் அந்த ரண்டு அமைப்பையும் வேற வழியில போய், தங்கட பக்கம் கொண்டுவர ரணில் தரப்பு பிளான் போட்டிருக்கு. அந்தப் பிளான்படிதான் ரஷ்ய நாட்டுப் பிளேனை ஏதோ ஒரு சாட்டுச் சொல்லி, போக விடாமல் மறிச்சு வைச்சிருக்கினம்.

அப்பிடிச் செய்தால், ரஷ்யாவுக்கு எதிரா இலங்கையும் இருக்கெண்டு நினைச்சு அமெரிக்காவுக்கு உச்சி குளிரும். அமெரிக்காவின்ர கையிலதானே சர்வதேச நாணய நிதியத்தின்ர நாணயக்கயிறு இருக்கு. அதால இனியும் நிபந்தனைகளை போட்டு காலத்தைக் கடத்தாமல், கெதியா உதவிகள் கிடைக்கும் எண்டதுதான் ரணில் கோஷ்டியின்ர திட்டம். ஆனாலும் இந்தத் திட்டமெல்லாம் ஆனானப்பட்ட அமெரிக்காவுக்கு விளங்காமல் இருக்குமோ எண்டதும் சந்தேகம் தான். என்னதான் இருந்தாலும் ரஷ்யாவின்ர பிளேனை மறிச்சு வைச்சு, அந்த நாட்டோட வலிய கொளுவலுக்கு இலங்கை போனது சனத்துக்குத் தான் பெருங்கவலை. அப்பிடி எங்கட சனமொண்டும் ரஷ்ய அபிமானிகள் இல்லை. இப்ப உக்ரேனோட நடக்கிற சண்டையால, ஐரோப்பிய நாடுகள் ரஷ்யாவிட்ட எரிபொருள் வாங்கிறேலை. இப்பிடிப்பட்ட நிலையில தன்ர எரிபொருள் பிஸ்னஸை செழிப்பாக்க, குறைஞ்ச விலையில ரஷ்யா விக்குது. அப்பிடிக் குறைஞ்ச விலையில எரிபொருளை எங்களுக்கும் தரச்சொல்லி இலங்கையும் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கேக்கதான் உந்தப் பிளேன் பிரச்சினை. இனி ரஷ்யா என்னெய் தந்தமாதிரித்தான். பெற்றோல் விலை குறையுமெண்டு நம்பியிருந்த சனத்துக்கு இந்தப் பிரச்சினையால கவலை வரத்தானே செய்யும்.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிசி ரூ.500!

## விரைவில் இந்த நிலை வருமென ஆலைகளின் உரிமையாளர்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 7

**இன்னும் சில வாரங்களில் ஒரு கிலோ அரிசியின் விலை 500 ரூபாவாக உயரும் நிலை ஏற்படலாம் என அநுராதபுரம் மாவட்ட சிறிய மற்றும் நடுத்தர ஆலை உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் சங்கத்தின் தலைவர் யு.கே.சேமசிங்க தெரிவித்ததாவது:

உணவுப் பற்றாக்குறை, நெல் தட்டுப்பாடு, விலைவாசி உயர்வு ஆகியவற்றால் நடுத்தர மக்கள் அரிசியை கிராமங்களில் இருந்து கொள்வனவு செய்து குவிக்கத் தொடங்கியுள்ளனர்.

நடுத்தர மக்கள் தற்போது கிராமங்களில் இருந்து பத்து முதல் பதினைந்து மூடைகள் நெல்லை எடுக்கின்றனர். இதனால் சிறிய நெல் ஆலை உரிமையாளர்கள் வெளிச்சந்தையில் கொள்முதல் செய்ய நெல் போதுமானதாக இல்லை. இந்த நிலையில் எமது தொழில்துறையும் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. இதன் காரணமாக குறுகியகாலத்தில் அரிசியின் விலை சுமார் 500 ரூபா வரை உயரும் நிலை ஏற்படலாம்.

இதனிடையே சாக்கு, எரிபொருள், கூலி, உதிரிப்பாகங்கள், போக்குவரத்து செலவு என அரிசியின் மொத்த உற்பத்திச் செலவு உயர்ந்துள்ளது. ஒரு கிலோ அரிசி உற்பத்திச் செலவு தற்போது 250 ரூபாவாக உள்ளது. இந்தநிலையில் ஒரு கிலோ அரிசியின் விலையை மேலும் 20 ரூபாவால் அதிகரிக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளோம் என்றார்.

> சாக்கு, எரிபொருள், கூலி, உதிரிப்பாகங்கள், போக்குவரத்து செலவு என அரிசியின் மொத்த உற்பத்திச் செலவு உயர்வடைந்துள்ளது. ஒரு கிலோ அரிசிக்கான உற்பத்திச் செலவு தற்போது ரூ.250 ஆகும்.

(ச-இ)



## கிருமி நாசினிகள் இல்லை: பயிர்கள் அழியும் நிலைமை

### கிளிநொச்சி விவசாயிகள் கவலை

கிளிநொச்சி மாவட்டத்தில் கல்மடு குளத்தின் கீழ் சிறுபோக பயிற்செய்கை மேற்கொண்டு வரும் விவசாயிகள் பலர், கிருமி நாசினி மற்றும் களைநாசினி இன்மையால் தாம் மிகையாகப் பாதிக்கப்பட்டுள்ளோம் என்று தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது: கல்மடு குளத்தின் கீழ் சிறுபோக பயிற்செய்கையை நாம் மேற்கொண்டு தற்போது 50 நாள்கள் கடந்துள்ள போதிலும் இதுவரை சேதனப் பசளைகளோ அல்லது களை நாசினிகளோ எமக்கு வழங்கப்படவில்லை. களை நாசினிகள் இல்லாததால் பயிர்களை சூழ்ந்து கோரைப் புற்கள் நிறைந்துள்ளன. அத்துடன் பயிர்கள் அழியும் நிலையும் ஏற்பட்டுள்ளது. நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை காரணமாக, தரிசு நிலமாக உள்ள அனைத்து இடங்களிலும் பயிர்ச்செய்கை மேற்கொள்ள வேண்டும் என அரசாங்கம் தெரிவித்து வருகின்றது.

பயிர்ச்செய்கை மேற்கொண்ட இடங்களுக்கே கிருமிநாசினிகளையும் களைநாசினிகளையும் வழங்க முடியாத அரசாங்கம் எவ்வாறு புதிதாக பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் இடங்களுக்கு அவற்றை வழங்கப்போகின்றது? - என்றனர்.

(ம-113)

## சண்டிலிப்பாயில் கைக்குண்டு மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 7

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சண்டிலிப்பாயில் நேற்றுமுன்தினம் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

ஐயனார் கோயில் வீதியில் உள்ள காணி ஒன்றை உரிமையாளர் துப்புரவாக்கியபோது, சந்தேகத்துக்கு இடமான பொருள் ஒன்றை அவதானித்துள்ளார். அது தொடர்பில் மானிப்பாய் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் கைக்குண்டை இனங்கண்டனர்.

அந்தப் பகுதியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த பொலிஸார், நீதிமன்ற அனுமதி பெற்று கைக்குண்டை அகற்றுவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

(எ-125)

## வெதுப்பக உணவுகள் மீண்டும் 10 ரூபாவால் அதிகரிக்கப்படும்

கொழும்பு, ஜூன் 7


வெதுப்பக உணவுகளின் விலை மீண்டும் 10 ரூபாவால் அதிகரிக்கப்படும் என்று இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசாங்கம் வற் வரியை அதிகரித்ததாலேயே வெதுப்பக பொருள்களின் விலையை அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கமைய பாண் தவிர்ந்த அனைத்து பேக்கரி பொருள்களுக்கும் வெதுப்பக உரிமையாளர்கள் 12 சதவீத வற் வரி செலுத்த வேண்டியுள்ளது.

வற் வரியை நீக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால், ஒரு பணிஸின் விலை 10 ரூபாவால் அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்படும். வெதுப்பக வற்வரியை நீக்க வேண்டும். இது தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு எழுத்து மூலம் அறிவிக்கவுள்ளோம் -என்றார்.

(ம-14-இ)



## வடக்கு – கிழக்கு விவசாயிகளுக்கு உரம்கோரி இந்தியாவுக்குக் கடிதம்!

### நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் நடவடிக்கை

மன்னார், ஜூன் 7

வடக்கு, கிழக்கு பகுதி விவசாயிகளுக்கு தகுந்த நேரத்தில் உரம் கிடைப்பதற்கு வழிவகைகளை ஏற்படுத்த வேண்டும் என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேக்கு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கடிதம் அனுப்பிவைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-


வடக்கு, கிழக்கில் வாழும் பெரும்பாலான தமிழ் மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கின்றனர். அவர்கள் தற்போது அடுத்த போகத்துக்கான விவசாயத்துக்குத் தம்மைத் தயார்ப்படுத்தியுள்ளனர். ஆனால், நாட்டில் நிலவும் பொருளாதாரப் பிரச்சினையால் அவர்களுக்கு உரம் சரியான நேரத்தில் கிடைக்குமா என்பது சந்தேகமாகவே உள்ளது. அவ்வாறு தகுந்த நேரத்தில், உரம் கிடைக்காது விட்டால் வாழ்வாதாரம் மிகவும் பாதிப்புகளுக்கு உள்ளாகும் அபாயம் தோன்றியுள்ளது.

ஆகவே தாங்கள் இந்திய பிரதமருடன் இது விடயமாக கலந்தாலோசித்து, வடக்கு - கிழக்கு விவசாயிகளுக்கான உர விநியோகம் குறித்து தீர்க்கமான ஒரு முடிவை மேற்கொள்ளுமாறு தங்களைக் கோருகின்றேன் -என்றுள்ளது.

(ம-60)

## தமிழக நிவாரணப் பொதிகள் கிளிநொச்சியில் பகிர்ந்தளிப்பு





கிளிநொச்சி, ஜூன் 7

தமிழகத்தால் வழங்கப்பட்ட நிவாரணப் பொதிகள் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று பகிர்ந்தளிக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன் குறித்த நிவாரணப் பொதிகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலர், மேலதிக மாவட்டச் செயலர், மாவட்டச் செயலக அதிகாரிகள், பிரதேச செயலர்கள், கிராம அலுவலர்கள், இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

(ம-14-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### உணவு தவிர்ப்பில் ஈடுபட்ட

# 17 ஈழத்தமிழர்களும் மருத்துவமனையில்!

### உடல்நிலை மோசம் எனத் தகவல்

**சென்னை, ஜூன் 7**

**தமிழ்நாடு - திருச்சி தடுப்பு முகாமில் அடைத்துவைக்கப்பட்டுள்ள தம்மை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி, உணவு தவிர்ப்பில் ஈடுபட்டு வந்த 17 ஈழத்தமிழர்களும் திருச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.**

திருச்சி தமிழ்நாடு சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப் பட்டுள்ள 17 இலங்கைத் தமிழர்கள், தங்களை விடுதலை செய்யக்கோரி இரண்டு வாரங்களுக் கும் மேலாக உணவு தவிர்ப்புப் போராட்டத் தில் ஈடுபட்டு வருகிறார் கள். தண்ணீரை மட்டும் அருந்தி போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அவர்கள், தங்களை விடுவிக்காவிட் டால் கருணைக் கொலை செய்ய வேண்டும் என் றும் தங்களுடைய உடல் உறுப்புகளை தமிழ்நாட்டு மக்களுக்கு தானம் செய்ய வேண்டும் என் றும் கோரிக்கை விடுத் துள்ளனர்.

இந்தத் தடுப்பு முகாமில் 104 இலங்கைத் தமிழர் கள் உள்ள நிலையில், அவர்கள் அனைவரும் தம்மை விடுவிக்க வேண் டும் என்று வலியுறுத்தி நேற்றுமுன்தினம் கவன வீர்ப்புப் போராட்டத்தை யும் முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

(ம-20-60-56)



## சூரிய மின்நிலையத்தில் திடீரென தீ விபத்து

வவுனியா, ஜூன் 7

வவுனியா கள்ளிக்குளத்தில் அமைந்துள்ள சூரிய மின் உற் பத்தி நிலையத்தில் நேற்றிரவு திடீரென தீ பற்றியுள்ளது.

இந்தத் தீ விபத்தில், நிலையத் தில் புதிதாக பொருத்துவதற் கென வைக்கப்பட்டிருந்த சூரிய ஒளி மின் உற்பத்தி உபகர ணங்களும் தீப்பற்றி எரிந்தன.

தகவலறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்த வவுனியா நகரசபை தீயணைப்புப் படையினர் தீயை அணைத்துக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

எனினும் சூரிய மின்கலங்கள் அனைத்தும் பாவிக்க முடி யாத அளவுக்குச் சேதமடைந் துள்ளதாக பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

(ம-14-110)

## ஈழத்தமிழர்களின் கோரிக்கையை ஸ்டாலின் நிறைவேற்ற வேண்டும்

### கஜேந்திரன் எம்.பி. வலியுறுத்து

**இலங்கையில் இனப்படுகொலை, யுத்தம் காரணமாகவே இங்கிருந்து பலர் வெளி நாடுகளுக்குச் சென்ற நிலையில், அவ்வாறு வருபவர்களுக்கு அடைக்கலம் தருவதாகக் கூறி ஈழத்தமிழர்களை சிறப்பு முகாம்களில் அடைத்து வைத்திருப்பது என்பது உண்மை யில் ஏற்றுக்கொள்ள முடியாத விடயம்.**

யாழ்ப்பாணம், ஜூன் 7

தமிழகத்தின் சிறப்பு முகாம் களில் தடுத்து வைக்கப்பட் டுள்ள ஈழத்தமிழர்களின் கோரிக் கையை நிறைவேற்ற தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் உட னடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந் திரன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத் தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இத னைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழகத்தின் சிறப்பு முகாம் களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈழத்தமிழர்கள் தொடர்ச்சியாக உணவு தவிர்ப்புப் போராட் டத்தில் ஈடுபட்டு வருவதால் அவர்களின் உடல்நிலை மிக வும் மோசமடைந்துள்ளது. இந்த நிலையில் அவர்கள் முன் வைத்த கோரிக்கைகள் இதுவ ரையில் நிறைவேற்றப்படாதது உண்மையில் ஏமாற்றத்தையும் மனவேதனையும் தருகின்றது.

இலங்கையில் இடம்பெற்ற இனப் படுகொலை, யுத்தம் காரணமா கவே இங்கிருந்து பலர் வெளிநா டுகளுக்குச் சென்ற நிலையில், அவ்வாறு வருபவர்களுக்கு அடைக்கலம் தருவதாகக்கூறி ஈழத்தமிழர்களை சிறப்பு முகாம் களில் அடைத்து வைத்திருப்பது என்பது உண்மையில் ஏற்றுக் கொள்ள முடியாத விடயம். எனவே அவர்களின் கோரிக்கையை நிறை வேற்றி அவர்களை விடுவிப்ப தற்கு தமிழக முதலமைச்சர் நடவ டிக்கை எடுக்க வேண்டும். மேலும் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் விருப்பத்துக்கு ஏற்ப தாயகம் திரும்புவதற்கோ அல்லது தொடர்ந் தும் தமிழகத்தில் இருப்பதற்கோ உரிய ஏற்பாடுகளை தமிழக முதலமைச்சர் செய்ய வேண்டும் -என்றார்.

(ம-14-26)

## கச்சதீவு எம்முடைய வளம் சூறையாடுவதை ஏற்கோம்!

### இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பு இப்படித் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 7

கச்சதீவு என்பது மீனவர்களின் பிரச்சினை அல்ல. அது எமது நாட்டிலுள்ள வளம்மிக்க ஒரு தீவு. எனவே எமது நாட்டில் உள்ள அந்தத் தீவை கையகப்படுத்துவதை, சூறையாடுவதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது என அகில இலங்கை தொழிலாளர்சமூகங்களின் கூட்ட மைப்பின் தேசிய அமைப்பாளர் வீ.சுப்பிரமணி யம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி நிலை யில் இந்தியாவிடம் கையேந்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த இக்கட்டான சூழ்நிலையில் எமது தொப்புள்கொடி உறவான தமிழ்நாடு அரசு எமக்கு உதவி செய்வதுபோல் பொருள்களை அன்பளிப்பாகக் கொடுத்துவிட்டு, கச்சதீவைத் திரும்பப் பெறுவதற்கு எத்தனிப்பது கோபத்தை யும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்திய - இலங்கை மீனவர்களுக்கு இடையே இழுவைமடித் தொழில் தொடர்பில் பிரச்சினை யொன்று இருக்கும் நிலையில், கச்சதீவை ஆக்கிரமிக்க தமிழக முதல்வர் எடுக்கும் முயற்சி எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பறித் துக்கொள்ளும் செயலே.

எனவே, தமிழக முதல்வர் தனது கருத்துத் தொடர்பில் மீண்டும் சிந்தித்து தனது கருத்தைத் திரும்பப் பெறுவதுடன், நெடுங்காலமாக இருக் கும் தீர்க்கப்படாத பிரச்சினையான இழுவைமடிப் பிரச்சினைக்கு காத்திரமான தீர்வை முதலில் பெறவேண்டும் -என்றார்.

(ம-125)



## இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பு நேற்று அங்குரார்ப்பணம்!

யாழ்ப்பாணம், ஜூன் 7

அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பு யாழ்ப்பாணத்தில் நேற்று அங்கு ரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்றுக் முற்பகல் 10 மணிக்கு இந்த அமைப்பு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

சமாதானம், சகவாழ்வு மற்றும் சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதற்கான பயணம் எனும் தொனிப்பொருளில் அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பு செயற் படும் என்றும், வடக்கு, தெற்கு, கிழக்கு, மலை யகம் என இலங்கையின் பல்வேறு பகுதிகளை யும் சேர்ந்த பிரதிநிதிகள் இந்த கூட்டமைப்பில் அங்கம் வகிக்க உள்ளனர் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(ம-20)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புத் தேவையுடையோர் முன்னேற வழிசெய்யுங்கள்

## மன்னார் மாவட்டச் செயலர் கோரிக்கை



**மன்னார், ஜூன் 7**

**சிறப்புத் தேவையுடையோர் முன்னேற அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வர வேண்டும் என்று மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தெரிவித்துள்ளார்.**

மன்னார் மாவட்ட சிறப்புத் தேவையுடையோருக்கான விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் இடம்பெற்றன. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னாரிலுள்ள சிறப்புத் தேவையுடையோர் பல்வேறுபட்ட தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்கு நாம் கைகொடுப்போமாகில் அவர்கள் மேலும் வலுப்பெற்றவர்களாக மாறும் வாய்ப்புள்ளது. சிறப்புத் தேவையுடையோரை ஏன் மாற்றுத்திறனாளிகள் என்று அழைக்கின்றோம். சாதாரண மனிதர்களை விட இவர்களிடம் ஒரு சிறப்புத் திறன் இருக்கின்றது என்பதே அதன் அர்த்தப்பாடு. மன்னாரைப் பொறுத்தமட்டில் சிறப்புத் தேவையுடையோர் அதிகமான மனத்திடனும் பல்வேறு முயற்சிகளோடும் காணப்படுகின்றனர். இவர்கள் தனி மனிதனாகவோ அல்லது கூட்டு முயற்சியாகவோ உற்பத்திப் பொருள்களை மேற்கொண்டு வருகின்றார்கள். இவர்களுடைய இந்த மனப்பலம் இறைவனால் கொடுக்கப்பட்ட ஒரு கொடை என்றே கூறவேண்டும். இவர்களைக் கையாளுவோரை நான் பாராட்டி நிற்கின்றேன். சிறப்புத் தேவையுடையவர்களின் வாழ்வில் ஒளியேற்ற பல தரப்பினரும் முன்வர வேண்டும். அவர்களை மையப்படுத்தி பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் - என்றார். (ம-14-60)



## மூளாய் - தொல்புரம் பகுதியில் வீதி மின்விளக்குகள் பொருத்தல்

யாழ்ப்பாணம், ஜூன் 7

மூளாய் - தொல்புரம் பகுதியில் உள்ள பின்தங்கிய கிராமங்களில் வீதி மின்விளக்குகள் பொருத்தும் பணிகள் அண்மையில் இடம்பெற்றன. நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனின் நிதி ஒதுக்கீட்டில் வலி.மேற்குப் பிரதேச சபையால் வீதி மின்விளக்குகள் பொருத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. (ம-14,20)

## நவக்கிரி- வித்தகபுரம் பகுதியில் கல்வி நிலையம் திறந்து வைப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 7

வலிகாமம், வடக்கு நவக்கிரிவித்தகபுரம் பகுதியில் மாலை நேரக் கல்வி நிலையக் கட்டடம் நேற்று திறக்கப்பட்டது.

நவக்கிரி, வித்தகபுரம் விடியல் மக்கள் முன்னேற்றக்கழகத்தின் ஏற்பாட்டில், லண்டன் ஸ்ரீகற்பக விநாயகர் ஆலயத்தின் நிதி அனுசரணையில் இந்தக் கல்வி நிலையம் அமைத்துக் கொடுக்கப்பட்டது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா கட்டத்தை திறந்து வைத்தார். (ம-14,20)





## விளையாட்டு விழா

கொடிகாமம், ஜூன் 7

கொடிகாமம் தெற்கு பாலர் பராமரிப்பு நிலையத்தின் 2022ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழா கடந்த சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு தவசிகுளம் பராமரிப்பு நிலைய மைதானத்தில் நடைபெற்றது. நிலையத் தலைவர் மா.மதிவண்ணன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக போக்கட்டி அ.த.க. பாடசாலை அதிபர் தி.அபராஜிதன், சாவகச்சேரி பிரதேச சபை உபதவிசாளர் செ.மயூரன், கொடிகாமம் பனை.தெ.வ கூ.ச. முகாமையாளர் து.தங்கநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-159)



தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த கர்ப்பிணிகளுக்கு பிரச வத்துக்கான பொருள்கள் 7 ஆவது விஜயபாகு காலாட் படையின் சமூக செயற்பாடுகள் திட்டத்தின்கீழ் நேற்று சாவகச்சேரி சிவன் கோயில் வீதியிலுள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் வழங்கப்பட்டன. (ச-9)

## தென்மராட்சியில் உதவித் தொகை இன்று வழங்கல்

சாவகச்சேரி, ஜூன் 7

தென்மராட்சிப் பிரதேசத்தில் பொது சன மாதாந்த உதவிப் பணம் மற்றும் நோய்களுக்கான கொடுப்பனவு பெறுபவர்களுக்கு ஜூன் மாதக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

அதன்படி அந்தந்த அஞ்சல் அலுவலகங்களில் இன்று 7ஆம் திகதி தொடக்கம் மேற்படி பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என பிரதேச சமூக சேவைகள் அலகினர் அறிவித்துள்ளனர். (ச-9)

### ஆசிரியர் | கடிதம்

# தனியொருவனுக்கு உணவில்லையேல்...

இலங்கையின் பொருளாதாரம் மிக மோசமான நிலையை அடைந்துள்ளது. விலைவாசி உயர்வு வானத்தை தொடும் நிலையில் உள்ளது. பொருள்களுக்குப் பற்றாக்குறைகள் தற்போதே தலைவிரித்தாட ஆரம்பித்துள்ளன. வறுமை நிலையில் உள்ள குடும்பங்கள் ஒருவேளை உணவுக்கே அங்கலாய்க்கும் அவலநிலை ஏற்பட்டுள்ளது. அந்தக் குடும்பங்கள் படும்பாடு சொல்லிமாளாது.

"தனி ஒருவனுக்கு உணவு இல்லையேல் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்" என்று பாடினான் பாரதி. ஆனால் எம்மில் பலர் இந்த நெருக்கடி நிலைக்குள்ளும் பொறுப்புணர்ந்து செயற்படாதது மிகமிக வேதனை.

கடந்தவாரம் சந்நிதி கோவில் வீதி (உப்பு வீதி) வழியாகப் பயணித்தபோது என் மனமே உறைந்துவிட்டது.யாரோ ஒருவருடைய வீட்டில் ஏதோ ஒரு நிகழ்வு நடந்து, ஏராளமான மீதி உணவுகள் வீதியோரமாகக் கொட்டப்பட்டிருந்தன. அவற்றைக் காகங்கள் உணவாக்கிக் கொண்டிருந்தன. அட கடவுளே! ஒருநேர உணவுக்கே வாழ்வா சாவா? என்று நாம் போராடி உழைத்துக் கொண்டிருக்கும்போது வசதிபடைத்தவர்கள் இப்படி இந்த உணவுகளை வீணடிக்கலாமா?

வசதி படைத்தவர்களே!, உங்கள் வீடுகளில் நிகழ்வுகள் நடத்தும்போது நீங்கள் தாராள மனம் காட்டத்தான் செய்வீர்கள். எனவே உணவுகள் மீதமாகுவதற்கு வாய்ப்புக்கள் மிகமிக அதிகம். அவ்வாறு மீதமாகும் உணவை கிராம அலுவலர் உள்ளிட்ட அதிகாரிகளுடன் தொடர்பை ஏற்படுத்தி சிறுவர் இல்லங்களுக்கோ அல்லது முதியோர் இல்லங்களுக்கோ வழங்குங்கள். அது உங்களுக்கும் உங்கள் சந்ததிக்கும் புண்ணியப் பேறாகும். ஏழை மக்கள் வயிறார உண்டு பசியாறட்டுமே!

**அ.அன்பு**, வரணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ரணிலும் மாயமானே!

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை அடுத்து அரசாங்கத்துக்கு எதிராக எழுந்த மக்கள் எழுச்சி ரணில் விக்கிரமசிங்கவின் பதவியேற்பின் பின்னர் வீரியம் தணிந்திருக்கின்றது. தங்களுக்கு எதிரான மக்கள் எழுச்சியை ரணில் விக்கிரமசிங்கவின் துணையுடன் ராஜபக்சக்கள் ஒருவாறு சமாளித்துக் கொண்டுள்ளனர். புதிய மாற்றத்தை நோக்கிச் செல்லக்கூடிய சந்தர்ப்பம் ஒன்றை நாடும், நாட்டு மக்களும் தவறவிட்டுள்ளனர். இன்னொரு வகையில் சொன்னால் ராஜபக்சக்களும், ரணிலும் கூட்டுச் சேர்ந்து விரித்த தந்திர வலையில் மக்கள் இப்போது சிக்கிக் கொண்டுள்ளனர் என்பதே பொருத்தமாக இருக்கும்.

ரணில் விக்கிரமசிங்க பிரதமரானதும் வெளிநாடுகளின் நிதியும், உதவிகளும் வந்து கொட்டும் என்ற நம்பிக்கை மக்களிடையே ஏற்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் உண்மையில் அவ்வாறு எதுவும் நடக்கவில்லை, அவ்வாறு நடப்பதற்கான சாத்தியங்களும் இல்லை. பல்வேறு நிதியுதவிகள் தொடர்பாக அரசாங்கத் தரப்புகளால் வாய்வார்த்தைகள் வெளியிடப்பட்டாலும், அவை இலங்கைக்குக் கிடைக்கும் என்பதற்கான எந்தவித உத்தரவாதமும் இல்லை என்பதே உண்மை நிலைமை.

ரணில் விக்கிரமசிங்க பிரதமரானதும், முன்னர் இருந்த நெருக்கடி நிலைமை சற்றுச் சீராகியதைப் போன்ற தோற்றம் உருவாகியிருந்தது. எரிபொருள் நெருக்கடி, எரிவாயு நெருக்கடி என்பன சற்றுத் தணிந்தன. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இந்தியக் கடனுதவியைக் கொண்டு அந்த நிலைமையை ஏற்படுத்தியிருந்தார். இந்த நிலைமை நிரந்தரமானது அல்ல என்பதை இப்போது நிகழும் அடுத்த கட்ட விலையேற்றங்களும், அத்தியாவசியப் பொருள்களுக்கு மீண்டும் பெரியளவில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாடும் பகிரங்கப்படுத்தியுள்ளன. முன்னர் ஆட்சியில் இருந்தவர்களுக்கும் சரி, தற்போது ஆட்சியில் இருப்பவர்களுக்கும் சரி நாட்டை இந்த இக்கட்டில் இருந்து மீட்பதற்கான தொலைநோக்குச் சிந்தனைகள் எதனையும் கொண்டிருக்கவில்லை. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கூட நாட்டின் டொலர் கையிருப்பை உயர்த்தவும், ரூபாவின் கையிருப்பைப் பேணவும் திட்டங்கள் எதுவும் இல்லை. ராஜபக்சக்களைப் போல ரணிலும் ஒரு மாயமானாக மாறிவிட்டார்.

அரசாங்கத்தின் மீதும், ராஜபக்சக்கள் மீதும் இருந்த மக்கள் எதிர்ப்புணர்வைத் தணிப்பதற்கான நகர்வுகளே இப்போது முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன. அரசியல் பிரமுகர்கள் மீதான விசாரணைகள், தண்டனை விதிப்புக்கள் என்பன கூட மக்கள் கவனத்தைத் திசை திருப்ப மேற்கொள்ளும் தந்திரோபாயங்களே தவிர, எவரும் தண்டிக்கப்படப் போவதில்லை என்பது கடந்த காலச் சம்பவங்களைக் கொண்டு உய்த்துணர முடியும்.

குடுகுடுப்பைக்காரன் போல இலங்கையின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஒவ்வொரு நாளும் நாட்டின் மோசமான நிலைமை தொடர்பில் அறிவித்துக் கொண்டிருக்கிறார், எதிர்வு கூறிக் கொண்டிருக்கிறார். ஆனால் அவற்றுக்கான தீர்வுகளை அவர் இன்னமும் முன்வைப்பதாக இல்லை. சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவியை மட்டும் ரணில் முன்னிறுத்திக் கொண்டிருக்கிறார்.

இந்த அரசியல் சித்து விளையாட்டுக்குள் தொடர்ச்சியாக நாட்டு மக்கள் சிக்குண்டு ஏமாந்து போகின்றனர் என்பதுதான் வேதனையான விடயம். நாட்டை இந்த நிலைமைக்குக் கொண்டு வந்தவர்களை முற்றாக அகற்றி, நிபுணத்துவம் வாய்ந்தவர்களைப் பதவிகளில் அமர்த்தி நாட்டை முன்னேற்றக் கூடிய சந்தர்ப்பம் ஒன்று மக்களால் தவறவிடப்பட்டுள்ளது. அடுத்தடுத்த மாதங்களில் இலங்கை மக்கள் அந்தத் தவறை மிக நன்றாகவே உணருவார்கள். ஆனால் அது காலம் கடந்த ஞானமாகவே இருக்கப்போகின்றது.

நாளொரு நல்வார்த்தை

"எல்லாத் தடைகளையும் தாண்டி, எடுத்த செயலை நன்னெறிப் பாதையில் முடிப்பவனே உண்மையான மனிதன்" - துளசிதாசர்




# நாணயநிதியக் கடன்களால் நாடு முன்னேற்றமடையாது

## அதுரலிய ரதன தேரர் சுட்டிக்காட்டு



**கொழும்பு, ஜூன் 7**

**சர்வதேச நாணய நிதியத்திடம் கடன்பெற்றுக் கொள்வ தன் மூலம் எந்தவொரு நாடும் முன்னேற்றமடைந்தது கிடையாது என நாடாளுமன்ற உறுப்பினர் அதுரலிய ரதன தேரர் சுட்டிக்காட்டியுள்ளார்.**

சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினர்களின் செய்தியாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டின் பொருளாதார நிலைமை நெருக்கடிக்குள்ளாகத் தொடங்கியதும் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லவேண்டும். உலக வங்கியிடம் செல்லவேண்டும் எனப் பல தரப்புகளாலும் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டது. வேறு சிலர் ரணில் பிரதமராக வந்தபோது அவரால் இந்தப் பிரச்சினையில் இருந்து நாட்டை மீட்கமுடியும் என்று குறிப்பிட்டனர். அவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து நாங்களும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்தோம்.

ஆனால் தற்போது அவர்களால் எதுவும் முடியாது என்பது புலனாகின்றது. பொது மக்கள் சட்டிக்குப் பயந்து அடுப்பில் விழுந்துள்ளனர். இந்த உலகம் அட்சய பாத்திரம் கிடையாது. சர்வதேச நாணய நிதியத்திடம் கடன்பெற்ற எந்தவொரு நாடும் முன்னேற்றமடைந்தது கிடையாது. அதற்குப் பதில் அதலபாதாளத்துக்குள் தள்ளப்படும் நிலையே ஏற்படும் - என்றார். (ச-இ)

## அரச நிறுவனங்களின் தலைவர்களை

# முற்கூட்டிய அறிவிப்பு இன்றி பதவிநீக்கம் செய்யமுடியாது!

## ஜனாதிபதி செயலகம் வலியுறுத்து

**கொழும்பு, ஜூன் 7**

**ஜனாதிபதி செயலகத்துக்கு அறிவிக்காமலோ, ஜனாதிபதி செயலக இணக்கப்பாடு இன்றியோ அமைச்சுக்களின் கீழ் உள்ள அரச நிறுவனங்களின் தலைவர்களை திடீரென்று பதவி நீக்கம் செய்யக் கூடாது என்று ஜனாதிபதி செயலகம் அறிவுறுத்தியுள்ளது.**

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் ஜனாதிபதி செயலாளர் காமினி செனரத் இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளார். குறித்த சுற்றறிக்கையில், அமைச்சுகளின் கீழ் உள்ள அரச நிறுவனங்களின் தலைவர்களை தன்னிச்சையாக நீக்கும் நடவடிக்கை நிறுத்தப்படவேண்டும். அவ்வாறு நிறுவனத் தலைவர்கள் பதவி நீக்கப்பட வேண்டுமாயின் முன்கூட்டியே ஜனாதிபதி செயலகத்துக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்றுள்ளது. (ய)

நாளை 08.06.2022 புதன்கிழமை வைகாசி 25

சுபநேரம்: 04.22 - 05.52

ராகுகாலம்: 11.52 - 01.22

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org










**உங்கள் வாழ்வில் எதை
எல்லாம் கொண்டு வர
நினைக்கின்றீர்களோ
அதை எல்லாம் ஏற்கனவே
அடைந்தது போல்
எண்ணிக் கொள்ளுங்கள்
என்கின்றது ஈர்ப்பு விதி**







# சூழல் பன்மைத்துவமே மனித சமூக இருப்பு!

தசன்

இன்றைய உலகம் மிகவும் நவீனத்துவப்படுத்தப்பட்டுள்ளது. அனைத்துத் துறையிலும், சகல வழிகளிலும் மனித சமூகம் முன்னேறிவிட்டது என்றும், மனிதன் மண்ணைத் தாண்டி விண்ணைத் தொட்டுவிட்டான் என்றும் ஒருபுறம் பெருமை பேசிக்கொண்டிருந்தாலும் அன்றைய காலத்தைப்போன்று இன்றைய காலத்தில் நாம் சூழல் பன்மைத்துவத்தைப் பேணுகின்றோமா? என்று கேட்டால் 'இல்லை' என்பதுதான் பதில்.

சூழலின் மூன்று ஆதாரங்களான நிலம், நீர், வளி ஆகிய அனைத்துமே மனித நடவடிக்கையால் இன்று பெரும் மாசடைவுக்கு உட்பட்டுள்ளன. இன்றைய மனித அறிவாற்றலையும், விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களையும் மெச்சும் நாம் அதன் ஆபத்துக்களை அறிந்தும், அறியாதவர்கள்போல கண்மூடித்தனமாக இருப்பது எமது எதிர்கால சந்ததியினர் பற்றிச் சிந்திக்காத சுய நலத்தின் வெளிப்பாடே!




**இயற்கைச் சமநிலை இழப்பால் மனித சமூகத்துக்கே அழிவுகள்**

சூழலில் உள்ள வளங்களில் முதன்மையானதும் மீள் உருவாக்கக்கூடியதுமான வளம் மனித வளமே ஆகும். அந்த மனித வளம் இன்று சூழலிலுள்ள அனைத்துப் பௌதிக வளங்களையும் தனது தேவை கருதி ஆக்கிரமித்துப் பயன்படுத்தி வருகின்றது.

இந்தப் பௌதிக வளங்களில் பல வளங்கள் மீளவும் உருவாக்க முடியாதவை. பல வளங்கள் மீள உருவாகுவதற்கு பலநூறு ஆண்டுகள் செல்லக்கூடியவை. ஆதலால் மீளப் புதுப்பிக்க முடியாத அல்லது புதுப்பிக்க நெடுங்காலம் எடுக்கக்கூடிய வளங்களின் அழிவு சொல்லொணாப் பாதிப்புக்களை மனித சமூகத்துக்கு உருவாக்கவல்லன.

நகர வெப்பத் தீவுகள், உருவாகல், ஓசோன்படைத் தேய்வு, பச்சைவீட்டு வாயுகள், கபிலநிற நகர உருவாக்கம், பனிப்பாறைகள் உருகல், கடல்நீர் மட்டம் உயர்த்தல், தீவுகள் நீரில் மூழ்கும் அபாயம், தொழிற்சாலைகள், வாகனப் போக்குவரத்து அதிகரிப்பால் வளி மாசுபடுதல், மனித நரம்பு மண்டலம் மற்றும் இருதயசுவாசப் பிரச்சினைகள் ஏற்படல், மனித தேவைக்கு சுத்தமான குடிதண்ணீர் அற்றுப்போகும் நிலை என்பன அத்தகைய பாதிப்புக்களில் சில.



**பூதாகரமாகும் காடழிப்பு**

மனிதனின் எல்லாவிதத் தேவைகளும் இயற்கையின் அமைவிடமான சூழலிலிருந்துதான் பெறப்படுகிறது. இன்று மனிதனாலும் இயற்கையாலும் மழைக்காடுகள் அழிகின்றன.

எரிபொருள் தேவை, எரிவாயுத் தேவை, விவசாய நடவடிக்கை, பெருந்தெருக்கள் அமைத்தல், தண்டவாளங்கள் அமைத்தல், செயற்கை நகர உருவாக்கம் உள்ளிட்ட பல காரணங்கள் காடுகள் அழிக்கப்படக் காரணமாக இருக்கின்றன.

காடுகள் அழிந்தால் நாடுகள் பாலைவனம் ஆகும். சீரான மழைவீழ்ச்சி அற்ற நிலை, உயிர்ப் பல்வகைத்தன்மை இல்லாமற்போகும் நிலை, உணவுப்பஞ்சம், தண்ணீர் ஆதாரங்கள் அற்றுப் போகும் நிலை ஏற்படுவதற்கு காடுகள் அழிக்கப்படுவது காரணமாக அமைகின்றது.

நாம் வாழும் சூழல் இனிமையானதாகவும் அமைதிப் பூங்காவாகவும் மிளிர வளங்களைப் பாதுகாத்து இயற்கையோடு ஒன்றி வாழவேண்டும். எமது சுற்றாடலை சரியாக முகாமைத்துவம் செய்தல் வேண்டும். நாம் வாழும் சுற்றாடலையும், அதன் வளங்களையும் மிகச்சரியாக முகாமை செய்து, எதிர்கால சந்ததியினரின் நலன்கருதியும் பேண்தகு வளப்பயன்பாட்டை மேற்கொள்ள வேண்டும்.

> **எரிபொருள் தேவை, எரிவாயுத் தேவை, விவசாய நடவடிக்கை, பெருந்தெருக்கள் அமைத்தல், தண்டவாளங்கள் அமைத்தல், செயற்கை நகர உருவாக்கம் உள்ளிட்ட பல காரணங்கள் காடுகள் அழிக்கப்படக் காரணமாக இருக்கின்றன.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** முயற்சியில் கவனம் தேவை. அடுத்தவரை நம்பி முக்கியமான வேலைகளை ஒப்படைக்க வேண்டாம். பணியில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். புதிய முயற்சி வேண்டாம்.

**இடபம்:** அரசு விஷயத்தில் எச்சரிக்கை தேவை. பணியாளர்களுக்கு அதிகாரிகள் ஆதரவு கிடைக்கும். செயல்களில் நிதானம் தேவை. தேவை நிறைவேறாமல் போகும்.

**மிதுனம்:** நீண்ட நாள் முயற்சி இன்று நிறைவேறும். பணவரவால் பொன் பொருள் வாங்குவீர்கள். தடைபட்ட முயற்சி நிறைவேறும். புதிய வேலை வாய்ப்புக்கான அழைப்பு வந்து சேரும்.

**கடகம்:** பணவிஷயத்தில் கவனம் தேவை. முயற்சி நிறைவேற விட்டுக் கொடுத்து செல்வது அவசியம். முயற்சியில் தீவிரம் காட்டுவீர்கள். நினைத்ததை சாதிப்பீர்கள்.

**சிம்மம்:** எண்ணம் இன்று நிறைவேறும். சகோதரர் ஆதரவால் உங்கள் எதிர்பார்ப்பை நிறைவேற்றிக் கொள்வீர்கள். பணியாளர்கள் கவனமுடன் செயற்பட வேண்டும்.

**கன்னி:** எதிர்பாராத செலவு உண்டாகலாம். அலைச்சல் அதிகரிக்கும். செயலில் கவனம் தேவை. குடும்பத்தினரால் தொல்லைகளை சந்திப்பீர்கள். வார்த்தையில் கவனம் தேவை.

**துலாம்:** நெருக்கடியில் இருந்து விடுபடுவீர்கள். பணவரவு கூடும். நினைத்ததை இன்று முடிப்பீர்கள். மனதில் புதிய சிந்தனை உண்டாகும். எதிர்காலத்துக்குரிய வழியை தேர்வு செய்வீர்கள்.

**விருச்சிகம்:** பணியிடத்தில் செல்வாக்கு உயரும். கவனமுடன் செயற்பட்டு அதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். தொழிலை மாற்றி அமைக்கவோ விரிவு செய்யவோ முயற்சிப்பீர்கள். எண்ணம் நிறைவேறும்.

**தனுசு:** இரண்டு நாள்களாக இருந்த நெருக்கடி விலகும். முயற்சிகள் இன்று தாமதமாக நிறைவேறும். அறிவாற்றலால் பிரச்சினைகளை சமாளிப்பீர்கள். தடைகளை தாண்டி வெற்றி பெறுவீர்கள்.

**மகரம்:** தடைகளும் தாமதமும் உண்டாகும். மனதில் தேவையற்ற குழப்பங்கள் வந்து செல்லும். செயல்களில் இன்று சிரமங்களைக் காண்பீர்கள். பிரச்சினை குறுக்கிடலாம்.

**கும்பம்:** இனிய சம்பவங்களால் மகிழ்வீர்கள். எதிர்பார்த்த ஒன்றை இன்று அடைவீர்கள். யோகமான நாள். வாழ்க்கைத் துணை வழியே எதிர்பார்ப்பு நிறைவேறும். பணவரவு ஏற்படும்.

**மீனம்:** செயல்களில் இன்று வேகம் இருக்கும். உங்களுக்குண்டான பிரச்சினைகளை சரிசெய்வீர்கள். சுறுசுறுப்பாக செயற்பட்டு பணியில் பாராட்டு பெறுவீர்கள். எதிர்ப்புகள் விலகும்.

### பொருளாதாரத் தடைக்கு மத்தியில்
# அடுத்தடுத்து 8 ஏவுகணைகளை செலுத்தி வடகொரியா மிரட்டல்

**சியோல், ஜூன் 7**

**உலக நாடுகளின் எதிர்ப்பையும், அமெரிக்கா மற்றும் ஐக்கிய நாடுகள் சபை என்பனவற்றின் பொருளாதாரத் தடைகளையும் மீறி வடகொரியா ஒரே நாளில் 8 ஏவுகணைகளை சோதித்து மிரட்டல் விடுத்துள்ளது.**



இந்த வருடத்தில் இதுவரை சுமார் 50க்கும் மேற்பட்ட ஏவுகணைகளை வடகொரியா ஏவியுள்ளது. ஆனால், அவற்றில் சுமார் 90 வீதமானவை கண்டம்விட்டுக் கண்டம் பாய்ந்துசெல்லும் ஏவுகணைகளும் மேம்பட்ட ஏவுகணை ரகங்களும்தான். இந்த நிலையில் வடகொரியா நேற்றுமுன்தினம் 8 குறுந்தூர ஏவுகணைகளைச் செலுத்தியுள்ளது.

வடகொரியாவின் அயல்நாடும், பகை நாடுமான தென்கொரியாவை மிரட்டும் வகையிலேயே இந்தச் சோதனை நடத்தப்பட்டுள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. இந்த ஏவுகணைச் சோதனைகளுக்கு ஜப்பான், தென்கொரியா என்பன கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளன. (ச-இ)

# நைஜீரியாவில் துப்பாக்கிச்சூடு
### 50 பேர் சாவு



லாகோஸ், ஜூன் 7

நைஜீரியாவின் தென்மேற்கு பகுதியில் உள்ள ஓவோ நகரிலுள்ள கத்தோலிக்க தேவாலயம் ஒன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் 50 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர் எனவும் பலர் காயமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தேவாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை சிறப்பு வழிபாடு ஏராளமான பக்தர்களுடன் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை திடீரென அங்கு நுழைந்த மர்மநபர்கள் அங்கிருந்தோர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர்.

தாக்குதல் நடத்தியவர்கள் அடையாளம் காணப்படவில்லை என்று அந்த நாட்டுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தேவாலயத்தில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு நைஜீரியா ஜனாதிபதி முஹம்மது புஹாரி கண்டனம் தெரிவித்துள்ளார். (ச-இ)



# எட்டு ஏவுகணைகளை தெ.கொரியாவும் ஏவியது
### வடகொரியாவுக்குப் பதிலடி

சியோல், ஜூன் 7

வடகொரியா எட்டு ஏவுகணைகளை அடுத்தடுத்து ஏவி கொரியப் பிராந்தியத்தில் பதற்றத்தை ஏற்படுத்தியதை அடுத்து, வடகொரியாவுக்குப் போட்டியாக தென்கொரியாவும் அடுத்தடுத்து எட்டு ஏவுகணைகளை சோதித்துள்ளது.

தென்கொரியாவின் கிழக்கு கடற்கரையில் இருந்து இந்த ஏவுகணைகள் ஏவப்பட்டன. வடகொரியாவின் எந்த நகரையும் தாக்கும் வல்லமை இந்த ஏவுகணைகளுக்கு உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# அமெரிக்காவில் தொடர் துப்பாக்கிச்சூடு
### 9 பேர் உயிரிழப்பு

நியூயோர்க், ஜூன் 7

அமெரிக்காவில் 48 மணிநேரத்தில் 3 வெவ்வேறு இடங்களில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 9 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவின் பென்சில்வேனியா மாகாண பிலடெல் பியா நகரில் உள்ள மக்கள் கூட்டம் அதிகமுள்ள வீதியொன்றில் நேற்றுமுன்தினம் மர்மநபர்களால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் மூவர் உயிரிழந்துள்ளனர்.



அதேவேளை டென்னசியின் சட்டனூகா பகுதியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டு தாக்குதலில் 3 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 14 பேர் படுகாயமடைந்தனர். அதேபோல் மிச்சிகனில் உள்ள சாகினாவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் மூவர் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அமெரிக்காவில் கடந்த சில வாரங்களாக அடுத்தடுத்து துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)



# நயன் – விக்னேஷ் திருமணம்; ஸ்டாலினுக்கு நேரில் அழைப்பு

சென்னை, ஜூன் 7

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினை இயக்குநர் விக்னேஷ் சிவன் மற்றும் நடிகை நயன்தாரா ஆகியோர் நேரில் சந்தித்து திருமண அழைப்பிதழ் வழங்கியுள்ளனர்.

நடிகை நயன்தாராவுக்கும் இயக்குநர் விக்னேஷ் சிவனுக்கும் எதிர்வரும் 9ஆம் திகதி மகாபலிபுரத்தில் திருமணம் நடைபெறவுள்ள நிலையிலேயே இருவரும் நேரில் சென்று திருமணத்துக்கு வருகை தருமாறு அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்தநிலையில் இந்த ஒளிப்படம் தற்போது சமூகவலைத்தளத்தில் வைரலாகி வருகின்றது. (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தென்மராட்சியில் பரவலாக

# வீட்டுத்தோட்டங்களை அழிக்கும் குரங்குகள்

## கட்டுப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 7

**தென்மராட்சிப் பகுதியில் வீட்டுத்தோட்டங்களைக் குரங்குகள் அழிக்கும் சம்பவங்கள் பரவலாக இடம்பெற்றுள்ளன. எனவே குரங்குகளின் தொல்லையைக் கட்டுப்படுத்தி உதவவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இது தொடர்பில் தென்மராட்சிப் பகுதி மக்கள் மேலும் தெரிவித்ததாவது:-

நாடு வரலாறு காணாத பொருளாதாரப் பின்னடைவுக்குள் தள்ளப்பட்டுள்ளது. இன்னும் சில வாரங்களில் உணவுக்கு தள்ளாடும் நிலை ஏற்படப் போகின்றது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. இதனால், பொதுமக்களை விவசாயம் செய்யுமாறு அரசாங்கம் ஊக்குவிக்கின்றது. அனைத்து வீடுகளிலும் வீட்டுத்தோட்டம் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் இந்த அறிவுறுத்தலுக்கு அமையவும், எமது வீடுகளில் மரக்கறிக் கொள்வனவுச் செலவைத் தவிர்க்கும் விதமாகவும் நாம் வீட்டுத்தோட்ட நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம். வீட்டுத்தோட்டத்துக்குத் தேவையான விதைகள் மற்றும் செடிகளை எமது சொந்தச் செலவிலேயே கொள்வனவு செய்து மேற்கொள்கின்றோம். ஆனால், இங்குள்ள குரங்குகள் எமது இந்த வீட்டுத்தோட்ட முயற்சிக்குப் பெரும் பின்னடைவாக இருக்கின்றன. பயிர்கள், செடிகள் வளரும்போது அவற்றை மிக இலகுவாக அவை அழித்து விடுகின்றன. எனவே பொதுமக்களை வீட்டுத்தோட்டங்களில் ஈடுபடுமாறு ஊக்குவிக்கும் அரசாங்கம் அதற்கான சூழ்நிலையையும் திறம்பட ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். துறைசார் அதிகாரிகள் இந்த குரங்குத் தொல்லையைக் கட்டுப்படுத்தி எமது வீட்டுத்தோட்டத்தை நாம் நல்லமுறையில் அமைக்கவும் பயன்பெறவும் வழிவகைகளை ஏற்படுத்த வேண்டும் - என்றனர். (ம)

## சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ்.மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் 'வாராந்தச் சொற்பொழிவும் மாதந்தோறும் நாயன்மார் குருபூசை நிகழ்வும்' என்ற தொடரின் 24 ஆவது சொற்பொழிவு நிகழ்வு, எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அரியாலை நீர்நொச்சித்தாழ்வு சித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நாவலர் குருபூசை மற்றும் தலைமையுரை நிகழ்வுகளைத் தொடர்ந்து 'நாவலரே நமக்கான அடையாளம்' என்ற கருப்பொருளில் இளம் சைவப்புலவர் ச.நவநீதன் சிறப்புச் சொற்பொழிவை ஆற்றவுள்ளார்.

✱ ✱ ✱

நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தானம் நடத்தும் வாராந்தச் சிறப்புச்சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது. சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் தலைமையுரையை ஆலயத்தின் பரிபாலன சபைத்தலைவர் த.சோதிலிங்கமும் சிறப்புச்சொற்பொழிவை 'தருமம் என்று ஒரு பொருள் உளது' என்ற கருப்பொருளில் சைவப்புலவர் ஏ.அனுசாந்தனும் ஆற்றவுள்ளனர். (ம-14)

மக்களின் போராட்டத்தால்

## பிரத்தியேக வாகனத்தைக் கைவிட்டு பின்வழியாகத் தப்பித்தார் அமைச்சர்



கொழும்பு, ஜூன் 7

அம்பாந்தோட்டை- அம்பலாந்தோட்டைப் பிரதேசத்தில் மக்களால் முன்னெடுத்த போராட்டத்தால், தனது உத்தியோகபூர்வ வாகனத்தைவிட்டு பிரதேச செயலக வாகனமொன்றில் நழுவிச் சென்றுள்ளார் கமநல சேவைகள், வனஜீவராசிகள் மற்றும் வனவளப் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர.

அம்பலாந்தோட்டை பிரதேச செயலகத்தில் துணைப் பயிர்ச்செய்கை தொடர்பான தேசிய வேலைத்திட்டத்தின் கலந்துரையாடல் அகில இலங்கை விவசாயிகள் சங்கப்பிரதிநிதிகளுக்கும் அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கும் இடையில் இடம்பெற்றது.

இதன்போது பிரதேச செயலகத்தின் வெளியே ஒன்றுகூடிய பொதுமக்கள், 'சிறுபோகப் பயிர்ச்செய்கைக்கு உரம் வழங்குமாறும், விவசாயிகளுக்கு எரிபொருள் வழங்க விசேட நடவடிக்கை மேற்கொள்ளுமாறும்' கோஷங்கள் எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

விவசாயிகள் திரளாக ஒன்றுகூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் அமைச்சர் மஹிந்த அமரவீர, தனது உத்தியோகபூர்வ வாகனத்தை விட்டுப் பிரதேச செயலகத்தின் வாகனம் ஒன்றில் பிரதேச செயலகத்தின் பின்வழியாகச் சென்றுள்ளார். (ம-14,இ)



மூத்த எழுத்தாளர் தெணியானுக்கான அஞ்சலி நிகழ்வுகள், கொக்குவில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன. நிகழ்வின் ஒருபகுதியாக நினைவுப் பேருரைகளும் இடம்பெற்றன. (ம)

## மரக்கறி நாற்றுகள் விலை அதிகரிப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 7

சந்தைகளில் மரக்கறி நாற்றுக்களின் விலைகள் கணிசமான அளவு அதிகரித்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டின் பொருளாதார நெருக்கடி மற்றும் உணவுப்பற்றாக்குறை காரணமாக வீட்டுத்தோட்டத்தில் ஈடுபடுமாறு அனைத்து மக்களையும் அரசாங்கம் அறிவுறுத்தியுள்ளது. இதனால் சந்தையில் மரக்கறி நாற்றுக்களின் கேள்வி அதிகரித்துள்ளதால் அவற்றின் விலையும் கணிசமான அளவு அதிகரித்துள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (ம)

## வற்றாப்பளை ஆலயத்தின் தீர்த்தம் எடுக்கும் நிகழ்வு

முல்லைத்தீவு, ஜூன் 7

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் பொங்கலை முன்னிட்டு பல நிகழ்வுகள் இடம்பெற்று வரும் வேளையில் கடல்நீரில் தீர்த்தம் எடுக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

மரபு வழிவந்த நிகழ்வுகளாக அடியவர்களால் கொண்டாடப்பட்டு வரும் கடல் நீரில் தீர்த்தம் எடுக்கும் நிகழ்வு, முள்ளிவளை காட்டுவிநாயகர் ஆலயத்தில் இருந்து பாரம்பரிய முறைப்படி முல்லைத்தீவு தீர்த்தக்கரைக்கு சென்று, கடல் நீரில் தீர்த்தம் எடுக்கப்பட்டது. இதன் அடுத்த நிகழ்வாக எடுக்கப்பட்டு வந்த தீர்த்தம் ஏழு நாள்கள் முள்ளியவளை காட்டுவிநாயகர் ஆலய அம்மன் சன்னிதியில் வைக்கப்பட்டு உப்புநீரில் விளக்கெரியும் காட்சி இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து எதிர்வரும் 12ஆம் திகதி காட்டு விநாயகர் ஆலயத்தின் பொங்கல் நிகழ்வுகள் நடைபெறும். அதன் பின் மறுநாள் 13ஆம் திகதி திங்கட்கிழமை வற்றாப்பளை கண்ணகி அம்மனின் வைகாசி விசாக பொங்கல் நிகழ்வு நடைபெறும். (ம-14,19)

## மாடுகள் விபத்துக்குள்ளாகும் சம்பவங்கள் திடீர் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 7

அரியாலைப் பகுதியில் உள்ள வயல்களில் மேய்ச்சலுக்கு விடப்படும் மாடுகள் வாகனங்களுடன் மோதி உயிரிழக்கும் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெறுகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வயல்களில் மேய்ச்சலுக்காக விடப்படும் மாடுகள் ஏ-9 வீதியைக் கடக்கும்போது வேகமாக வரும் கனரக வாகனங்களில் மோதிச் சாவடைகின்றன. மாடுகள் விபத்துக்குள்ளாகின்ற போது ஒட்டோ, மோட்டார் சைக்கிள் போன்ற வாகனங்களில் பயணிப்போரும் காயமடைகின்றனர்.

எனவே மாடுகளின் உரிமையாளர்கள் மாடுகளைக் கட்டி வளர்க்குமாறும், வயல்களில் இருந்து மாடுகளை அவிழ்த்துக் கொண்டுசெல்லும்போது உரிய பாதுகாப்பு நடைமுறைகளுடன் அழைத்துச்செல்லுமாறும் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (ம -14,9)

## போதையில் கணவன் தாக்குதல் மனைவியின் பற்கள் உடைந்தன

கணவன் தாக்கியதில் மனைவியின் பற்கள் உடைந்துள்ளன. அவற்றில் ஒருபல் வயிற்றுக்குள் சென்றுள்ளது. குறித்த பெண் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் சாவகச்சேரி சங்கத்தானையில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது.

மதுபோதையில் வந்த கணவன், தனக்கு உணவு வழங்கத் தாமதமாகியதாலேயே மனைவியைத் தாக்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. 43 வயதான குறித்த பெண் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரஷ்ய விமான விவகாரம்;
## பறப்பதற்கு அனுமதிக்குமாறு மேன்முறையீடு செய்யப்பட்டது

கொழும்பு, ஜூன் 7
ரஷ்ய விமானத் தடையை நீக்குமாறு ரஷ்ய ஏரோப்ளோட் கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்துக்கு கோரிக்கை விடுத்துள்ளது.
ரஷ்ய ஏரோப்ளோட் ஏ-330 ரக விமானம் இலங்கையைவிட்டு வெளியேறுவதைத் தடுத்து கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றம் கடந்த வியாழக்கிழமை தடை உத்தரவை பிறப்பித்தது. இதற்கமையவே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
தடை உத்தரவை நீக்குமாறு தெரிவித்த ஏரோப்ளோட்டின் கோரிக்கையை கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றம் எதிர்வரும் புதன்கிழமை பரிசீலிக்கவுள்ளது. (ம-14-இ)

## தடுக்கப்பட்ட ரஷ்ய விமானத்துக்கு உடனடித் தீர்வு எடுக்கவேண்டும்!
### தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 7
கொழும்பு சர்வதேச கட்டுநாயக்க விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ரஷ்ய விமானம் தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு காண, இலங்கை அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.
இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளுக்கும், இலங்கையின் பொருளாதாரத்துக்கும் பெரும் பாதிப்புக்கள் ஏற்படுவதற்கு முன்னர் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமெனவும் அவர் மேலும் வலியுறுத்தினார். (ம-14-இ)

## விமான விவகாரம்;
## ரஷ்யாவுடன் தனிப்பட்ட பிரச்சினைகள் இல்லை

கொழும்பு, ஜூன் 7
ரஷ்யாவுடன் இலங்கைக்கு எந்தப் பிரச்சினைகளும் இல்லை. இலங்கையில் இருந்து ரஷ்ய விமானம் வெளியேறுவதற்கு விதிக்கப்பட்ட தடை தனிப்பட்ட சட்டப்பிரச்சினை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
ரஷ்ய விமானமொன்று இலங்கையில் இருந்து வெளியேறுவதற்குத் தடை விதிக்கப்பட்டு விமான நிலையத்தில் மறித்து வைக்கப்பட்டுள்ளது. இந்த விமானம் விவாகாரத்தில் இலங்கை - ரஷ்யா இடையிலான உறவில் பாதிப்பு ஏற்படலாம் என்று கருதப்படும் நிலையிலேயே இவ்வாறு தெரிவித்தார் பிரதமர் ரணில். (ம-ய)

### பிரச்சினைகளைத் தீர்க்க வழிகள் இன்றி
## அரசாங்கம் கையறு நிலை
### விமல் வீரவன்ஸ காட்டம்



கொழும்பு, ஜூன் 7
**தற்போதைய அரசாங்கம் மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு எந்தவொரு தீர்வையும் வழங்க முடியாத நிலையில் உள்ளது என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ரணில் விக்கிரமசிங்க பதவிக்கு வந்தவுடன் இந்த நாட்டுக்கு பல்வேறு நாடுகளும் ஓடிவந்து உதவி செய்யும் என்ற பொதுவான எதிர்பார்ப்பு அனைவருக்கும் இருந்தது. ஆனால் இதுவரை எந்தவொரு நாடும் கைகொடுக்கவில்லை. குறைந்தபட்சம் அரசாங்கம் நட்பு நாடுகளுடன்கூட கலந்துரையாடல்களை மேற்கொண்டு இந்தப் பிரச்சினையை தீர்க்கும் வழிகள் குறித்து கவனம் செலுத்தவில்லை. இந்த நிலையில் மக்களுக்கு மேலும் மேலும் சுமைகளை ஏற்றும் வகையிலான செயற்பாடுகளைத்தான் தற்போதைய அரசாங்கமும் செய்து வருகின்றது.
தற்போதைய வரிவிதிப்பு மக்களுக்கு மேலும் சுமையாக மாறியுள்ளது. மக்கள் நாளுக்குநாள் புதுப்புதுப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். மக்களின் பிரச்சினைகளை நிவர்த்திசெய்ய முடியாத கையறு நிலையிலேயே தற்போதைய அரசாங்கம் உள்ளது - என்றார். (ச-இ)

## காலாவதியான மாத்திரைகள் கர்ப்பிணிகளுக்கு விநியோகம்!
### தெற்கு ஊடகம் அதிர்ச்சித் தகவல்

கொழும்பு, ஜூன் 7
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் இரண்டாம் தவணை ஆட்சியில் கர்ப்பிணிப் பெண்களுக்கு காலாவதியாகும் திகதியை அண்மித்திருந்த மருந்துப் பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டன என்று தென்னிலங்கை ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.
கர்ப்பிணிப் பெண்களுக்கு மாத்திரமன்றி ஒருசில நோயாளிகளுக்கும் வழங்கப்படும் போலிக் அசிட் மாத்திரைகளும் காலாவதியாகும் நாளை அண்மித்த நிலையில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது.
இவை 2013ஆம் ஆண்டு தொடக்கம் 2016ஆம் ஆண்டு வரை கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் நோயாளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. இந்த மாத்திரைகளில் நாற்பது இலட்சம் மாத்திரைகள் காலாவதியானவை என்று தெரியவந்தவுடன் அவற்றை நோயாளிகளுக்கு விநியோகிப்பதை இடைநிறுத்துவதற்கான அறிவித்தல் வழங்க முன்னதாக அவற்றில் 98 சதவீதம் மாத்திரைகள் நோயாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்தன என்றும் கூறப்படுகின்றது.
இந்தத் தகவல்கள் பொதுக் கணக்கு தொடர்பான நாடாளுமன்றக் குழுவால் வெளியிடப்பட்டுள்ள சமீபத்திய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது. (எ-இ)

## நீர் விநியோகம் நிறுத்தம்; பாடசாலைகள் ஆரம்பம்!
### மாணவர்கள் எவ்வாறு குடிதண்ணீரைப் பெறுவர்? இலங்கை ஆசிரியர் சங்கம் கேள்வி



கொழும்பு, ஜூன் 7
நாடு முழுவதும் பாடசாலைகள் ஆரம்பமாகியுள்ள நிலையில் நாட்டில் பாடசாலைகளுக்கான நீர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது.
இதனால் மாணவர்கள் பாடசாலைகளுக்கு வரும்போது எவ்வாறு தமது குடிதண்ணீரைப் பெறுவார்கள் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.
கொழும்பில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கேள்வியெழுப்பியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தற்போது நாட்டு மக்கள் அனைவரும் பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளனர். அன்றாட உணவுப் பொருள்களுக்கான செலவு, போக்குவரத்துச் செலவு, எரிபொருள், எரிவாயு செலவு ஆகியவை அதிகரித்துள்ளன.
அதேவேளை, கடந்த ஜனவரி மாதம் முதல் பாடசாலை நீர்க் கட்டணமும் பாடசாலை மாணவர்களது பெற்றோரே செலுத்தி வருகின்றனர். இவை பாடசாலை மாணவர்களின் பெற்றோருக்கு மேலதிக செலவை ஏற்படுத்தியுள்ளது.
இந்த நிலையில் நாட்டின் அதிகளவான பாடசாலைகளில் குறிப்பாக மேல் மாகாணத்தின் பல பாடசாலைகளில் நீர் விநியோக வசதி நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் மாணவர்கள் பாடசாலைக்கு வருகின்றபோது தங்களுக்குத் தேவையான தண்ணீரை எவ்வாறு அவர்கள் பெற்றுக்கொள்வார்கள்? இது குறித்து கல்வி அமைச்சுடன் உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.
அத்துடன் எரிபொருள் விலையேற்றம் காரணமாக பொதுப்போக்குவரத்து, பாடசாலைப் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் வாகனங்கள் போக்குவரத்துக் கட்டணங்களை அதிகரித்துள்ளன. மாணவர்களின் போக்குவரத்துக்கான செலவைக் கட்டுப்படுத்த நிவாரணங்கள் வழங்கப்படவேண்டும். இல்லையெனில் தொழிற்சங்க ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நாம் தயங்கமாட்டோம் - என்றார். (ச-இ)

## தபால் கட்டணத்தையும் அதிகரிக்கக் கோரிக்கை!

கொழும்பு, ஜூன் 7
தபால் கட்டணங்களை உயர்த்த வேண்டும் என்று தபால் திணைக்களம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.
சாதாரண தபால் கட்டணத்தை 15 ரூபாவிலிருந்து 20 முதல் 40 ரூபா வரையில் உயர்த்த வேண்டும் எனவும், அதிவேக தபால் சேவைக்கான கட்டணத்தை 55-65 ரூபாவிலிருந்து 200 ரூபாவாக உயர்த்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
2021ஆம் ஆண்டில் தபால் திணைக்களம் 7.2 பில்லியன் ரூபா நஷ்டமடைந்துள்ளது. தபால் கட்டணங்கள் உயர்த்தப்படாவிட்டால் நஷ்டம் காரணமாக பல தபாலகங்களை மூட வேண்டிய நிலைமை உருவாகும் என்று தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.
கடதாசி உள்ளிட்ட பல்வேறு பொருள்களின் விலைகள் உயர்வடைந்துள்ளதாலும் கட்டணங்களை உயர்த்த வேண்டிய தேவையுள்ளது என்றும் தொழிற்சங்கங்கள் சுட்டிக் காட்டியுள்ளன. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆற்றில் தவறி வீழ்ந்து ஒருவர் மாயம்

கொழும்பு, ஜூன் 7

பாணந்துறை எரிவாயு வரிசை யில் காத்திருந்த நபர் ஒருவர் கடந்த சனிக்கிழமை காலை முகம் கழுவச் சென்றபோது பாணந் துறை ஆற்றில் தவறி வீழ்ந்து காணாமற் போயுள்ளார் என்று கூறப்படுகின் றது.

பாணந்துறை உயிர்காக்கும் படையினர் அவரைத் தேடும் நடவடிக்கையில் ஈடுபட் டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

## பதவி வெற்றிடம் - வாகனத் திருத்துனர் - 2

ஹலோ ட்றஸ்ட் ஆனது ஐக்கிய இராச்சியத்தைத் தளமாகக் கொண்டு உலகளாவியரீதியில் 28 நாடுகளில் இயங்கிக்கொண்டிருக்கின்றது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருட்களை அகற்றிக்கொண்டிருக்கின்றது.

ஹலோ ட்றஸ்ட் மேலும் **இரண்டு வாகனத் திருத்துனர்களை** ஏற்கனவே இருக்கும் எங்களுடைய வேலைத்தள அணியினருடன் சேர்த்துக்கொள்ள விரும்புகிறது

- **தேவைப்படும் தகைமைகள்**
  - இலகுரக மற்றும் பார ஊர்தி வாகனங்களைத் திருத்தக்கூடிய அனுபவம் வாய்ந்தவர்களாக இருத்தல் வேண்டும்.
  - 3 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
  - முல்லைத்தீவு மாவட்டத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கைச் சாரதி அனுமதிப்பத்திரத்தினைக் கொண்டிருக்க வேண்டும். இதற்கு மேலதிகமாக மின்னிணைப்புக் கட்டுப்பாட்டு அமைப்புத் தொடர்பான அறிவினைக் கொண்டிருப்பதும் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

சம்பளமும் அதனுடன் தொடர்புபட்ட நன்மைகளும் அனுபவம் மற்றும் தகைமைகளைப் பொறுத்து பேசித் தீர்மானிக்கப்படும்.

ஆர்வமுள்ளவர்கள் உங்களுடைய சுயவிபரக்கோவை மற்றும் தொடர்புகொள்ளவேண்டிய விபரங்கள் என்பவற்றை 14 யூன் 2022 செவ்வாய்க்கிழமைக்கு முன்பாக கீழ் உள்ள தபால் முகவரிக்கோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்கலாம்.

**மனிதவள முகாமையாளர்**
**த ஹலோ ட்ரஸ்ட்,**
**450, திருநகர் மேற்கு, கிளிநொச்சி**
E-mail: hr@halosrilanka.org

(cr 36088) (2.6)

ஓம் சாயிராம்

# ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு 24 • 10 • 1951

உதிர்வு 19 • 05 • 2021

அமரர்

## ஜெயலஷ்மி குகபாஸ்கரன்

திதி: வெண்பா

ஆண்டு பிலவ அமைந்த வைகாசி வளர்பிறை
பூண்ட அட்டமிதனில் - மாண்புடையள்
ஜெயலட்சுமியவள் சீர்பதியை விடுத்து
நிஜமெனும் இறைபதமெய்தினள் சிறந்து.

ச. குகபாஸ்கரன்,
கணவர்
071 847 4592

என்றும் உந்தன் நினைவுகளோடு
குடும்பத்தினர்

(cr.36087) (2.6)

# முதலாம் ஆண்டு நினைவு தினம்



தோற்றம் 14 • 04 • 1938

மறைவு 19 • 05 • 2021

கடந்த 19.05.2021 ஆம் ஆண்டு அன்று அமரத்துவம்
அடைந்த எமது குடும்பத்தலைவர்

## அமரர் நாகலிங்கம் குலநாயகம்

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினம் இன்று
(07.06.2022) செவ்வாய்க்கிழமை அன்னாரின்
ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்தனை செய்கின்றோம்.

இனுவில் மேற்கு, இனுவில்.
செட்டிவளவு

(CS 45086)(3/6)

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



பிறப்பு 03 • 08 • 1979

இறப்பு 06 • 06 • 2022

## சோமசுந்தரம் செல்வகுமார் (குஞ்சன்)

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் செல்வகுமார் அவர்கள் நேற்று (06.06.2022) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் - நாகம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், தேவராசா - நகுலபாமா தம்பதியரின் அன்பு மருமகனும், தனுசாவின் அன்புக் கணவரும், துஷ்யந்தினி, துஷாந் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஈஸ்வரி, காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் செல்வராணி, சிவகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராசலிங்கம், யோகேந்திரன், சிவதர்சினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுலோஜனாவின் அன்பு மாமாவும், விதுஷாயினி, விதுசன், விதுசிகா ஆகியோரின் அன்பு சிறியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.06.2022) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 319 3947
077 551 5943

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21ஆம் திருத்தம் தொடர்பில் நாளை மனோ தரப்பு முடிவு!

கொழும்பு, ஜூன் 7
அரசமைப்பின் 21ஆவது திருத்தம் தொடர்பில் எதிர்வரும் 8ஆம் திகதி (நாளை) தமிழ் முற்போக்குக் கூட்டணியின் அரசியல் குழுக் கூட்டத்தில் தீர்க்கமான முடிவு எடுக்கப்படும் என்று கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
நிறைவேற்று ஜனாதிபதி முறைமை, ஜனாதிபதி வகிக்க கூடிய அமைச்சுக்கள், பிரதமரை நீக்குவதற்கான ஜனாதிபதியின் அதிகாரம், அமைச்சர்களை நியமிப்பதற்கான பிரதமரின் அதிகாரம், இரட்டைக் குடியுரிமை, சுயாதீன குழுக்கள், நீதிமன்ற சுயாதீனம் உட்பட்ட விவகாரங்களை ஆராயும் அதேவேளை இவற்றை விட இந்த அரசியலமைப்பு திருத்தத்தின் பக்கவிளைவாக விகிதாசார தேர்தல் முறைமைக்கும், 13ஆம் திருத்தம் மூலமான மாகாணசபை முறைமைக்கும் உடனடியாகவோ, காலம் கழித்தோ வரக்கூடிய ஆபத்துகள் தொடர்பிலேயே தமிழ் முற்போக்கு கூட்டணி சிறப்புக் கவனத்தைக் கொண்டுள்ளது - என்றார். (ம)

மாடிவெல குடியிருப்பில்

# போலி ஆவணத்தில் எம்.பிக்களுக்கு வீடு!

கொழும்பு, ஜூன் 7
மாடிவெலவில் அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான உத்தியோகபூர்வ வீட்டுத்தொகுதியில் போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து 20 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமக்கு வீடுகளைப் பெற்றுள்ளனர் என்று நாடாளுமன்ற வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் சொந்த வீடுகள் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மாடிவெல நாடாளுமன்ற உறுப்பினர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களில் வீடுகளை வழங்குவது சட்டவிரோதம்.

எனினும், கொழும்பில் வீடுகளைக் கொண்டுள்ள பலர் மாடிவெலவில் அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான உத்தியோகபூர்வ வீட்டுத் தொகுதியிலும் வீடுகளைப் பெற்றுள்ளனர்.

கொழும்பில் இரண்டு அல்லது மூன்று வீடுகளை வைத்திருப்பவர்களும் இதில் உள்ளடங்குகின்றனர்.

அத்துடன் மாடிவெல இல்லத்தில் வீடுகளைப் பெற்ற சில நாடாளுமன்ற உறுப்பினர்கள், இல்லங்களை மூடிவிட்டு வேறு இடத்தில் தங்கியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-14-இ)

## தொடரும்...

உயிரிழந்துள்ளாரெனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கடந்த 4 நாள்களில் கொழும்பிலும் அதன் புறநகர் பகுதிகளிலும் 5 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதில் ஐவர் கொல்லப்பட்டனர். எனினும், இந்தத் தாக்குதல்களை நடத்தியவர்கள் எவரும் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. (அ-ஒ-இ)

## விதிக்கப்பட்ட...

தடை விதித்து பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவை கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றம் இடைநிறுத்தியுள்ளது. வர்த்தக மேல் நீதிமன்ற நீதிபதி ஹர்ஷ சேதுங்கவால் நேற்று பிற்பகல் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2ஆம் திகதி விமானம் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தைவிட்டுவெளியேறதடைவிதித்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவை இரத்துச் செய்யுமாறு சட்டமா அதிபர் கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த விவகாரம் பயணிகளை சிரமத்துக்கு உள்ளாக்கியுள்ளது, தேசிய பொருளாதாரத்தை பாதித்துள்ளது மற்றும் சட்டரீதியான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளதாக ஒரு நகர்த்தல் பத்திரத்தை தாக்கல் செய்து, சட்டமா அதிபர் குறிப்பிட்டார்.

கடந்த வாரம், இரண்டு தனியார் நிறுவனங்களுக்கு இடையேயான சட்டத்தகராறு தொடர்பாக வணிக உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் ஏரோப்ளோட் விமானம் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை விட்டு வெளியேறுவது தடுக்கப்பட்டது.

இந்த நடவடிக்கை ரஷ்யாவைக் கடுமையாக கோபமூட்டியது. கொழும்புக்கும் மொஸ்கோவிற்கும் இடையிலான வர்த்தக விமான சேவைகளை நிறுத்துவதாக ரஷ்யாவின் ஏரோப்ளோட் அறிவித்துள்ளது. இந்த விவகாரம், இரண்டு தனியார் நிறுவனங்களுக்கு இடையேயான பிரச்சினை என்று வெளிவிவகார அமைச்சு விளக்கமளித்தது.

இந்த நிலையிலேயே விமானம் வெளியேற விதிக்கப்பட்ட தடை இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து நேற்று மாலை பயணிகளோடு 'ஏரோப்ளோட்' விமானம் கட்டுநாயக்கவிலிருந்து புறப்பட்டு, ரஷ்யா நோக்கிப் பயணித்தது. (அ-ஒ-இ)

## மஹிந்தவின்...

ரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். குறித்த விசாரணைகளுக்கமைய, சந்தேகநபராக அடையாளம் காணப்பட்ட தங்காலைப் பகுதியைச் சேர்ந்த, 53 வயதான நபரொருவர், நேற்றுக் காலை கொழும்பில் வைத்து குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரால் கைதுசெய்யப்பட்டார்.

கைதான சந்தேகநபர் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதையடுத்து, அவரை நாளை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். அத்துடன், சந்தேகநபரை குறித்த தினத்தில் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (அ-ஒ-இ)


### பதவி வெற்றிடம்

யாழ் நகரில் முன்னணி ஹோட்டல் ஒன்றிற்கு
Kitchen Helper, Waiter, Receptionist, House Keeping Staff தேவை.

076 222 0632, 077 593 8090



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் இந்துமதி நடேசு

தோற்றம் 24.02.1950 — மறைவு 20.05.2021

திதி: வளர்பிறை அட்டமி – 07.06.2022

மறந்திருக்க நினைத்தாலும் அம்மா
உங்கள் திருவுருவம்
மங்காத காட்சியாய் மனத்திரையில்
- தோன்றுதம்மா
உங்களோசை எம் செவியில் மதுரமாய்
- கேட்குதம்மா
அம்மா! உங்கள் ஆத்மா சாந்தியடையத்
- துதிக்கின்றோம்

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!

381, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்



## மரண அறிவித்தல்

பிறப்பு 25 . 11 . 1938



இறப்பு 06 . 06 . 2022

## திருமதி நாகேஸ்வரி நடராசா

"ஈஸ்வரபவனம்". கதிர்காம கோவிலடி. வதிரி. கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி நடராசா அவர்கள் 06.06.2022 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா-பாறுபதி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நடராசா (ஓய்வூதியர்) அவர்களின் அன்பு மனைவியும் ஈஸ்வரன். தயானேஸ்வரன் (டென்மார்க்). சிவனேஸ்வரன் (கனடா). ஜெகதீஸ்வரி (நியூசிலாந்து). சர்வேஸ்வரன் (உதவித்திட்டமிடல் பணிப்பாளர் பிரதேச செயலகம். யாழ்ப்பாணம்). இராஜேஸ்வரன் (அபிவிருத்தி இணைப்பாளர். பிரதேசசெயலகம். யாழ்ப்பாணம்). இராஜேஸ்வரி (அபிவிருத்தி உத்தியோகத்தர்-பிரதேசசபை. கரவெட்டி) காலஞ்சென்ற சதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெயபாரதி. புனிதவதி(டென்மார்க்). நீலகாந்தி(கனடா). சிறீஸ்காந்தராஜா (நியூசிலாந்து). தர்மினி. உஷாநந்தினி. கண்ணதாசன் (அதிபர். யா/நாகர் கோவில் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் மாதங்கி. துஷாரா சொஃபியா. றொபின். ஜனார்த்தனன். விஷ்ணுவர்த்தனன். நிவேதா. ஆத்மிகா. நிகாஷன். சகானா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் புவிஷ்னா. சாயிருத்திரன். வெருணன் ஆகியோரின் அன்புப் பூட்டியாரும் தர்மலிங்கம். சகுந்தலாதேவி. இரத்தினகுமார். புஷ்பராணி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.06.2022) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"[illegible]வனம்"
[illegible]கோவிலடி,
வதிரி,கரவெட்டி

தகவல் :
குடும்பத்தினர்
021 226 3049
077 910 3664


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளுக்கான ஊட்டச்சத்துப்பானம் மூன்று மாதங்களாக வழங்கப்படவில்லை

**கொழும்பு, ஜூன் 7**

**6 மாதம் முதல் ஒன்றரை வயதுக்கு இடைப்பட்ட குழந்தைகளுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் எம்.எம்.என் எனப்படும் ஊட்டச்சத்து பானம் கடந்த 3 மாதங்களாக வழங்கப்படவில்லை என்று இலங்கை குடும்பநல சுகாதார சேவைகள் சங்கத்தின் தலைவர் தேவிகா கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.**

'5 வயதுக்கு உட்பட்ட, குறைந்த நிறையுடைய பிள்ளைகளுக்கு வழங்கப்படும் ஒருவகை பிஸ்கெட் வகைகளும் 4 மாதங்களாக வழங்கப்படவில்லை. அரசாங்கத்தால் வழங்கப்படும் போசாக்கு உணவுகள் வழங்கப்படாத நிலையில், கர்ப்பிணித்தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் ஆரோக்கியம் தொடர்பில் கேள்வி எழுந்துள்ளது' என்று அவர் குறிப்பிட்டார். (அ-ஓ.-இ)

# போசாக்கான உணவுக்கு மாதம் ரூபா 21 ஆயிரம்!

## இரண்டு ஆண்டுகளில் இரட்டிப்பாகியது

கொழும்பு, ஜூன் 7

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் குடும்பம் ஒன்று போசாக்கான உணவைப் பெற்றுக்கொள்ள, நாளாந்தம் தேவைப்படும் தொகையானது, 700 ரூபாவாக அதிகரித்துள்ளதாக வயம்ப பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ரேணுக சில்வா தெரிவித்துள்ளார். இதற்கு முன்னர் கடந்த 2018 முதல் 2019ஆம் ஆண்டுகளுக்கு இடையிலான காலப்பகுதியில் இந்தத் தொகையானது 450 ரூபாவாக காணப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-ஓ-இ)

# அமைச்சர் பிரசன்ன குற்றவாளி: கடூழியச் சிறைத்தண்டனை!

கொழும்பு, ஜூன் 7

வர்த்தகர் ஒருவரை மிரட்டி கப்பம் கோரிய வழக்கில் குற்றவாளியென நிரூபிக்கப்பட்ட அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுக்கு, 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கால கடூழிய சிறைத்தண்டனையும், 25 மில்லியன் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுல திலகரத்னவால் குறித்த தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டது.

2015ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி, ஜெராட் மெண்டிஸ் என்ற வர்த்தகரை அச்சுறுத்தியே அவர் இவ்வாறு கப்பம் பெற முற்பட்டுள்ளார்.

பிரசன்ன ரணதுங்க, மேல் மாகாண முதலமைச்சராக செயற்பட்ட காலப்பகுதியில் மீதொட்டமுல்ல பகுதியில் சதுப்பு நிலமொன்றை நிரப்புவதற்கு அனுமதி வழங்கியமை மற்றும் அங்கு அனுமதியின்றி குடியிருந்தவர்களை வெளியேற்ற ஜெராட் மெண்டிஸ் என்ற வர்த்தகரிடம் 64 மில்லியன் ரூபா கோரி அச்சுறுத்தியமை உள்ளிட்ட 15 குற்றச்சாட்டுக்களின் கீழ் சட்டமா அதிபரால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

நீண்ட விசாரணையின் பின்னர் நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதன்படி 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கால கடூழிய சிறைத்தண்டனையும், 25 மில்லியன் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. அபராதத்தை செலுத்த தவறும் பட்சத்தில் மேலும் 9 மாதங்கள் சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடும் என அறிவிக்கப்பட்டது.

அத்துடன், சம்பவத்தில் பாதிக்கப்பட்ட வர்த்தகருக்கு ஒரு மில்லியன் ரூபா இழப்பீட்டை செலுத்துமாறும் அதனை செலுத்த தவறும் பட்சத்தில் மேலும் 3 மாதங்களுக்கு சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடும் என நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்ட அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் மனைவியான மொரின் ரணதுங்கவும், மற்றுமொரு சந்தேகநபரும் அனைத்து குற்றச்சாட்டுக்களிலிருந்தும் விடுவிக்கப்பட்டனர். (அ-ஓ-இ)

# ஜெனிவாவிலும் 'கோத்தா கோ கம'

கொழும்பு, ஜூன் 7

ஐரோப்பாவில் வசிக்கும் பெருந்தொகையான இலங்கையர்கள் சுவிற்ஸர்லாந்தின் ஜெனிவா நகரில் உள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அங்கு 'கோத்தா கோ கம' கிளை ஒன்றையும் நேற்றுமுன்தினம் நிறுவியுள்ளனர்.

இத்தாலி, ஜேர்மனி, பிரான்ஸ், சுவிற்சர்லாந்து, ஐக்கிய இராச்சியம் உட்பட ஐரோப்பாவில் வாழும் பெருமளவான இலங்கையர்கள் கலந்துகொண்டனர்.

இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக கோஷங்களை எழுப்பியவாறு பல மணிநேரம் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு அரசாங்கமே நேரடியாகப் பொறுப்பேற்க வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட பலர் தெரிவித்தனர்.

வாழ்க்கைச் சுமையால் அவதியுறும் மக்களை மேலும் ஒடுக்காமல் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் உடனடியாக பதவி விலக வேண்டும் என அவர்கள் தெரிவித்தனர். தற்போதைய அரசாங்கம் பதவி விலகி திருட்டு, மோசடி மற்றும் ஊழல் அற்ற அரசாங்கத்தை ஏற்படுத்தினால், அந்நியச் செலாவணி வருமானத்தை அதிகரிக்க, இலங்கைப் பொருளாதாரத்துக்கு டொலரை சேர்க்க தாம் தயாராக இருப்பதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் பலர் தெரிவித்தனர். (அ-ஓ-இ)

# மீண்டும் மஹிந்த பிரதமரானாலும் ஆச்சரியமில்லை

## இப்படிச் சொல்கிறார் பஸில்

கொழும்பு, ஜூன் 7

பிரதமர் பதவியிலிருந்து விலகிய மஹிந்த ராஜபக்ச மீண்டும் பிரதமராகினாலும் ஆச்சரியம் இல்லை என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுநரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, பொதுஜன பெரமுனவின் தலைவரான மஹிந்த ராஜபக்ச அழுத்தங்களுக்கு அடிபணிந்து பிரதமர் பதவியிலிருந்து விலகவில்லை. அவர் சுயவிருப்பின் பேரிலேயே பதவி விலகினார்.

பொதுஜன பெரமுனவிடமே நாடாளுமன்றில் பெரும்பான்மைப் பலம் தொடர்ந்தும் உள்ளது. எனவே, பிரதமர் பதவியிலிருந்து விலகிய மஹிந்த ராஜபக்ச மீண்டும் பிரதமராகினாலும் அதிசயம் இல்லை.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் சுயவிருப்பத்துக்கிணங்கவே புதிய பிரதமராக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டார். அதற்காக ரணிலின் நியமனத்துக்கு பொதுஜன பெரமுன எதிர்ப்பு என்று அர்த்தம்கொள்ள முடியாது.

ஜனாதிபதி - பிரதமர் இணைந்து முன்னெடுக்கும் நாட்டின் முன்னேற்றகரமான அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஆதரவு வழங்குவோம், என்றார். (அ-ஓ-22)

# பொலிஸாருக்கு எரிபொருள் 'கட்'

கொழும்பு, ஜூன் 7

சகல பொலிஸ் நிலையங்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளின் வாகனங்களுக்காக பயன்படுத்தப்படும் எரிபொருள் அளவை 20 சதவீதத்தால் குறைக்குமாறு பொலிஸ் மா அதிபர் சீ.டி.விக்ரமரத்ன சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.

கடந்த முதலாம் திகதி முதல் நடைமுறையாகும் வகையில் இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

மின்சாரம் மற்றும் எரிபொருளை சிக்கனமாக பயன்படுத்துவதற்காக முன்னரே, வாகனங்களுக்காக விநியோகிக்கப்படும் எரிபொருள் அளவை 15 சதவீதத்தால் குறைப்பதற்கும், தேவையற்ற மின்விளக்குகள், குளிரூட்டி இயந்திரங்களை நிறுத்துவதற்கும் ஆலோசனை வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஓ-இ)

# பொருள்களை சேமிக்கவேண்டாம் சந்தை இயல்பை பாதிக்கின்றது

## எரிவாயு விலை அதிகரிப்பு தொடர்பில் விசாரிப்போம் என்கிறார் வர்த்தக அமைச்சர்

கொழும்பு, ஜூன் 7

தேவைக்கு மேலதிகமாக உணவுப் பொருள்களை மக்கள் சேமிக்கின்றனர். அவ்வாறு செய்யவேண்டாம். மக்கள் அதிகமாக கொள்வனவு செய்வதால் சந்தையின் இயல்பை பாதிக்கின்றது என்று வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் இவ்வாறு கூறினார்.

அத்தியாவசியப் பொருள்கள் பட்டியலில் இருந்து எரிவாயு, பால்மா மற்றும் சிமெந்து ஆகியன நீக்கப்பட்டுள்ளன. எனவே, எரிவாயு விலையை உயர்த்துவதற்கு முன்னர் நுகர்வோர் விவகார அதிகார சபையுடன் கலந்தாலோசிக்க வேண்டிய அவசியமில்லை.

ஆனாலும் லாப்ஸ் காஸ் நிறுவனம் விலையை அதிகரித்துள்ளமை தொடர்பில் நுகர்வோர் அதிகார சபை அந்த நிறுவனத்தை அழைத்து விசாரணை மேற்கொள்ளும் என்று அவர் குறிப்பிட்டார். (அ-ஓ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ரின் மீன்...

சந்தையில் ரின் மீன் ஒன்றின் விலை 600 ரூபாவாக உயர்ந்துள்ளதால் நுகர்வோர் கடும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர். இதுவரை ரின் மீனின் விலை 400 ரூபாவாகவே காணப்பட்டது.

அத்தோடு முட்டை, இறைச்சி, கருவாடு மற்றும் காய்கறிகளின் விலை உயர்வால் தாங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர். பல கடைகளில் முட்டை விலை 48 முதல் 50 ரூபா வரை உயர்ந்துள்ளது. ஒரு கிலோ கோழிக்கறியின் விலை ஆயிரத்து 250 ரூபாவாக அதிகரித்துள்ளது. அனைத்து வகையான கருவாடுகளின் விலையும் ஏறக்குறைய இரு மடங்காக உயர்ந்துள்ளதாக சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ-ஒ-இ)

### ஓமானிலிருந்து...

ஓமானிலிருந்து நேரடியாக இலங்கைக்கு யூரியா உரத்தை அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு 65 ஆயிரம் மெட்ரிக் தொன் யூரியாவை நன்கொடையாக வழங்குவதற்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனது ஒப்புதலை வழங்கியுள்ளார். இந்தத் தொகுதி ஓமானில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்டு நேரடியாக இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படும். (அ-ஒ-இ)

### டீசல்...

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து நேற்று முதல் சந்தைக்கு டீசல் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி, 800 மெட்ரிக் தொன் டீசல் நேற்று சந்தைக்கு வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் சில நாள்களில் இந்த தொகையை மேலும் அதிகரிக்க திட்டமிட்டுள்ளதாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. (அ-ஒ-இ)

### இந்தியாவின்...

இரண்டு மாதங்களுக்குத் தேவையான சோளம் மற்றும் சோயா ஆகியன இந்தியக் கடன் எல்லை வசதியின் கீழ் கிடைக்கப்பெறவுள்ளன. சோளம் மற்றும் சோயா ஆகியன கிடைக்கப்பெற்றதும் உடனடியாக திரிபோஷா உற்பத்தி நடவடிக்கைக்களை மீள ஆரம்பிக்க முடியும் என திரிபோஷா தொழிற்சாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கர்ப்பிணித்தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் குறைந்த நிறை கொண்ட பிள்ளைகளின் ஊட்டச்சத்தை மேம்படுத்த அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் திரிபோஷா வேலைத்திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை. திரிபோஷா உற்பத்தியின் மூலப்பொருள்களான சோளம் மற்றும் சோயா என்பனவற்றின் தட்டுப்பாடு காரணமாக இந்த வேலைத்திட்டத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, மாதாந்தம் 750 கிராம் நிறைக்கொண்ட சுமார் 16 இலட்சம் திரிபோஷா பைக்கெற்றுகள் சுகாதார அமைச்சுக்கு தேவைப்படும் நிலையில், கடந்த சில மாதங்களாக திரிபோஷா தொழிற்சாலைகளின் உற்பத்தி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. மீண்டும் அந்தச் செயற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டுமாயின் மாதம் ஒன்றில் ஆயிரத்து 100 மெட்ரிக் தொன் சோளமும், 550 மெட்ரிக் தொன் சோயாவும் தேவைப்படுகின்றன.

இந்தியக் கடனுதவியில் இவை விரைவில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவை கிடைத்ததும் மீளவும் திரிபோஷா உற்பத்தி ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

### இலங்கைக்கு...

பொருளாதார - உணவு நெருக்கடிக்குள் சிக்கியுள்ள இலங்கை மக்களுக்காக ஒரு தொகை உருளைக்கிழங்கை வழங்க பங்களாதேஷ் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. சார்க் அமைப்பின் செயலாளர் நாயகம் எசல ருவன் வீரகோனுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா இந்த உறுதியை வழங்கியுள்ளார். (அ-ஒ-இ)

### எரிபொருள்...

இரு வாரங்களுக்கு ஒருமுறை எரிபொருள்களின் விலைகளை மீளாய்வு செய்வதற்கு அமைச்சரவை அனுமதித்திருந்தாலும், நேற்றைய தினம் எரிபொருள் மீளாய்வுக்கு அமைவாக விலை அதிகரிப்புக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஒ-இ)

### எரிவாயுக்...

2 ஆயிரம் மெட்ரிக் தொன் எரிவாயு தாங்கிய கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாக லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது. இதேவேளை, நாடளாவிய ரீதியில் லிட்ரோ எரிவாயு விநியோகம் இன்று வரை இடைநிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-இ)

### சிமெந்து...

உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் 50 கிலோ கிராம் சிமெந்து மூடையின் அதிகபட்ச சில்லறை விலை 150 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக சிமெந்து உற்பத்தியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர். இதன்படி, ஒரு மூடை சிமெந்தின் புதிய விலை ரூ. 3,000.

தற்போதைய டொலர் நெருக்கடி மற்றும் எரிபொருள் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. முன்னதாக ஏப்ரல் 25ஆம் திகதி சிமெந்து மூடையின் விலை ரூ. 500 அதிகரித்து, ரூ.2,850 ஆக காணப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஒ-இ)

### அத்தியாவசிய...

களுடைய இரண்டு சிறுவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சிசிரிவி காணொலி உதவியுடன் அவர்களைக் கைது செய்ததாகப் பொலிஸார் கூறுகின்றனர். (அ-ஒ-23)

### 21ஆம்...

சர்வகட்சி அரசாங்கத்தின் அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில், ஜனாதிபதி மாளிகையில் நேற்று மாலை நடைபெற்றது. இதன்போது திருத்தியமைக்கப்பட்ட உத்தேச 21 ஆவது திருத்தச்சட்ட வரைவை நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச அமைச்சரவையில் முன்வைத்துள்ளார். ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சு பதவியை மட்டும் வகிப்பதற்கு 21இல் அனுமதிவழங்கப்பட்டுள்ளது.

எனினும், பிரதமரை பதவி நீக்குவதற்கு ஜனாதிபதிக்குள்ள அதிகாரம் சம்பந்தமாக சர்ச்சை நீடிக்கின்றது. நாடாளுமன்றத்தின் அனுமதி இருந்தால் மட்டுமே ஜனாதிபதியால் பிரதமரை நீக்க முடியும், மாறாக தனது இஷ்டப்படி அதனை செய்ய முடியாது என சர்வகட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இணக்கம் எட்டப்பட்டிருந்தாலும், அதற்கு பொதுஜன பெரமுன கட்சி உடன்படவில்லை. பிரதமர் ரணிலை நேற்று முன்தினம் நேரில் சந்தித்து, இது தொடர்பில் மொட்டு கட்சி உறுப்பினர்கள் தெரியப்படுத்தி இருந்தனர்.

எனவே, பிரதமர் மீது நாடாளுமன்றத்துக்கு நம்பிக்கை இல்லை என ஜனாதிபதி கருதும் பட்சத்தில், அவரை பதவி நீக்கலாம் என்ற ஏற்பாட்டை 21 இல் உள்ளடக்குவது பற்றியும் தற்போது ஆராயப்பட்டு வருகின்றது.

21 ஐ நிறைவேற்றுவதற்கு மொட்டுக் கட்சியின் ஆதரவு அவசியம் என்பதால், இது விடயத்தில் பிரதமர் தரப்பிலும் உறுதியான நிலைப்பாட்டை எடுக்க முடியாமல் உள்ளது.

அமைச்சு நியமனம், நீக்கம், விடயதான ஒதுக்கீடு என்பவற்றிலும் இழுபறி தொடர்கின்றது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே 21க்கு அமைச்சரவை அனுமதி வழங்கவில்லை.

இரட்டைக் குடியுரிமை உடையவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகிப்பதற்கு தடை விதிக்கும் யோசனைக்கு எந்தவொரு தரப்பும் எதிர்ப்பில்லை என்று நீதி அமைச்சர் தெரிவித்தார். (அ-ஒ-44)

### தோற்றுப்போன...

வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மீண்டும் நான் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை. ஆனால் எனது பதவிக் காலத்தின் எஞ்சிய இரண்டு ஆண்டுகளையும் முடிக்காமல் வெளியேறமாட்டேன். தோல்வியுற்ற ஜனாதிபதியாக நான் பதவியிலிருந்து வெளியேற முடியாது.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு இந்தியா, சீனா, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளின் ஆதரவைப் எதிர்பார்த்துள்ளேன். இந்திய மற்றும் சீன தலைவர்களுக்கு தனித்தனியாக உதவி கோரி கடிதமும் அனுப்பியுள்ளேன். மத்திய கிழக்கு நாடுகளின் தலைவர்களுடனும் கலந்துரையாடியுள்ளேன். கச்சாய் எண்ணெய் பெற்றுக் கொள்ள நீண்ட கால ஒப்பந்தங்களை மேற்கொள்ள முயல்கின்றேன்.

சர்வதேச நாணய நிதியத்திடம் முன்னதாகச் சென்றிருக்கவேண்டும். ஒரு வருடத்துக்கு முன்னர் சென்றிருந்தால் இந்த நிலைமை தோன்றியிருக்காது - என்றார். (அ-ஒ-இ)

### 8 எரிபொருள்...

மாவட்டச் செயலர் க.மகேசன் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில், கமநல அபிவிருத்தித் திணைக்கள பிரதி ஆணையாளர் இ.நிஷாந்தன், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வடபிராந்திய முகாமையாளர் எஸ்.சிவரதன், கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்டக் கமக்கார அமைப்புப் பிரதிநிதிகள் என்போர் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில், மண்ணெண்ணெய் விநியோக அட்டை வழங்கப்பட்ட விவசாயிகளுக்கு இந்த மாதத்துக்குத் தேவையான மொத்த மண்ணெண்ணெயின் அளவில் கால் பங்கினை வழங்குதல், அந்த அளவு 10 லீற்றரை விடக் குறைவானதாயின் 10 லீற்றர் இனை வழங்குதல்,

நெற்காணிகளில் பயிர்ச் செய்கை மேற்கொண்டுள்ள மற்றும் இதுவரை மேட்டுக்காணி அடையாளப்படுத்தல் நிறைவுறுத்தப்படாமையால் மண்ணெண்ணெய் அட்டை விநியோகிக்கப்படாத விவசாயிகளுக்கு பயிர்ச் செய்கையை உறுதிப்படுத்திக் கொண்டு ஒரு விவசாயிக்கு தலா 5 லீற்றர் மண்ணெண்ணெயை டோக்கன் முறை மூலம் வழங்குதல்,

மண்ணெண்ணெய் அட்டையை வைத்துள்ள விவசாயிகளுக்கு இன்றும் ஏனைய விவசாயிகளுக்கு நாளையிலிருந்தும் உரிய மண்ணெண்ணெய் விநியோகித்தல் ஆகிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் யாழ். மாவட்டத்தில் 33 ஆயிரத்து 834 விவசாயிகளுக்கு மண்ணெண்ணெய் தேவை என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர்களில் மண்ணெண்ணெய்க்கான பதிவு அட்டையை ஆயிரத்து 169 பேரே வைத்துள்ளனர்.

இந்த நிலையில், சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு உட்பட்ட கொடிகாமம் எரிபொருள் நிரப்பு நிலையம், அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு உட்பட்ட அச்சுவேலி எரிபொருள் நிரப்பு நிலையம், நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு உட்பட்ட கோப்பாய் எரிபொருள் நிரப்பு நிலையம், நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு உட்பட்ட கல்வியங்காடு எரிபொருள் நிரப்பு நிலையம், பண்டத்தரிப்பு கூட்டுறவுச் சங்கத்துக்கு உட்பட்ட பண்டத்தரிப்பு எரிபொருள் நிரப்பு நிலையம், அளவெட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு உட்பட்ட மல்லாகம் எரிபொருள் நிரப்பு நிலையம், சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு உட்பட்ட சுன்னாகம் எரிபொருள் நிரப்பு நிலையம், நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு உட்பட்ட கட்டைவேலி எரிபொருள் நிரப்பு நிலையம் ஆகியன ஊடாகவே மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படவுள்ளது. (அ-ஒ-5)

### ஆஸி....

இலங்கை ஆஸ்திரேலியா கிரிக்கெட் தொடர் தொடர்பாக கொழும்பில் உள்ள நட்சத்திர விடுதியொன்றில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே சிறிலங்கா கிரிக்கெட்டின் செயலர் மொஹான் டி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, இலங்கையில் அமெரிக்க டொலர் கையிருப்பு குறைவாக உள்ள வேளையில் ஆஸ்திரேலிய அணியின் இலங்கைப் பயணம் நாட்டின் பொருளாதாரத்துக்கு பலமானதாக அமையும். எனவே, இந்த போட்டிக்கான ரிக்கெற் விற்பனை மூலம் கிடைக்கும் வருமானம் அனைத்தையும் தற்போது கடுமையான பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கும் மக்களுக்காக செலவிடும் நோக்கில் விளையாட்டு துறை அமைச்சிடம் ஒப்படைப்பதற்கு நாம் தீர்மானித்துள்ளோம், என்றார்.

இலங்கை, ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான முதலிரண்டு ரி - 20 ஆட்டங்களுக்குமான ரிக்கெற் விற்பனை ஆரம்பித்து சில மணித்தியாலங்களிலேயே அனைத்து ரிக்கெற்றுகளும் விற்பனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்று அதிகாரங்கள் ஜனாதிபதியிடம் வேண்டாம்

## 21ஆவது திருத்தம் தொடர்பில் அருட்தந்தை சிறில் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 7**

**நாட்டு மக்களுக்கு பயன்தரும் வகையில் அரசமைப்பின் 21 ஆவது திருத்தம் மேற்கொள்ளப்படுவது உண்மையென்றால், நிறைவேற்று ஜனாதிபதி முறைமை இல்லாமலாக்கப்பட வேண்டும் இவ்வாறு அருட்தந்தை சிறில் காமினி தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தில் உறுதிப்படுத்தப்பட்டிருந்த ஜனநாயக விடயங்களை 20ஆவது திருத்தம் இல்லாமலாக்கியது. தனி ஒரு நபருக்கு கீழ் வரையறை இல்லாத அதிகாரங்கள் 20ஆவது திருத்தத்தின் மூலம் குவிக்கப்பட்டிருக்கின்றன.

அதன் பாதிப்பை தற்போது நாங்கள் அனுபவித்து வருகின்றோம். அதனால் 21ஆவது திருத்தத்தின் தேவை தற்போது உணரப்பட்டு வருகின்றது. இதன்காரணமாக 20இல் இருக்கும் ஜனநாயக விரோத விடயங்கள், நாட்டுக்குப் பொருத்தமில்லாத விடயங்களை இல்லாமலாக்கியே 21ஆவது திருத்தம் கொண்டுவரப்படவேண்டும்.

அத்துடன் ஜனாதிபதி அமைச்சுப் பதவி வகிக்கும் விடயத்தில், அவர் பாதுகாப்பு அமைச்சு பதவியை மாத்திரம் வகிக்கமுடியும். இவ்வாறு இல்லாமல் வேறு அமைச்சுக்களின் நிறுவனங்களை தனக்கு கீழ் வைத்துக்கொள்ளமுடியாது. அமைச்சர்களை மாற்றும் அதிகாரமும் ஜனாதிபதிக்கு இருக்கக் கூடாது. இந்தத் திருத்தங்கள் 21இல் உள்வாங்கப்பட வேண்டும் - என்றார்.

(ச-இ)

# தகவல் தொழில்நுட்ப ஏற்றுமதியே டொலரை ஈர்ப்பதற்கான வழிமுறை

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 7

டொலரை சம்பாதிக்க பல்வேறு சிறந்த வழிகள் உள்ளன. தகவல் தொழில்நுட்பத் துறையில் ஏற்றுமதியை ஊக்குவிப்பது அவற்றில் ஒரு வழிமுறை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவிசாவளை ஸ்ரீ ரதனசார மகா வித்தியாலயத்துக்கு ஒருதொகுதி தொழில்நுட்பச் சாதனங்களையும் திறன் வகுப்பறையையும் நேற்றுமுன்தினம் கையளித்த பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று அரசாங்க நிதிப் பின்புலம் வெற்றாக உள்ளது. இன்று வங்குரோத்தான அரசும், வங்குரோத்தான நாடுமே உள்ளன. அரசாங்கம் வங்குரோத்து நிலையில் இருந்தாலும் எதிர்க்கட்சி நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படும். ராஜபக்ச அரசாங்கம் இந்த நாட்டை அழித்துவிட்டது. இப்போது ராஜபக்சக்களை மீள் சுழற்சி செய்த ஓர் அரசாங்கம் ஆட்சிக்கு வந்துள்ளது - என்றார். (ம)

# காத்தான்குடியில் கைக்குண்டு மீட்பு

மட்டக்களப்பு காத்தான்குடி பிரதான வீதியிலுள்ள ஹொட்டலில் கடந்த சனிக்கிழமை கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டது என்று காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர். ஹொட்டலின் பின்பகுதியில் கழிவு நீரை வெளியேற்றுவதற்கு தாங்கி ஒன்றைக் கட்டுவதற்காக நிலத்தைத் தோண்டும் போதே நிலத்தில் கைக்குண்டு புதைக்கப்பட்டிருந்தது அவதானிக்கப்பட்டது.

இதனையடுத்து பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த காத்தான்குடி பொலிஸார் கைக்குண்டை மீட்டனர்.

(ம-14,இ)

**பணிப்பெண் தேவை**

திருநெல்வேலிப் பகுதியில் 3 வயது பெண் குழந்தையை பராமரிப்பதற்கும் வீட்டு வேலை செய்வதற்கும் பணிப்பெண் தேவை.
கடமை நேரம் : 8.00 a.m - 5.00 p.m
சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

cs.45090 (2.6)

**077 229 9675**

**தேவை**

கொக்குவில் பிரதேசத்தில் அமைந்துள்ள மருந்தகம் ஒன்றிற்கு அனுபவமுள்ள பெண் உதவியாளர் தேவை. (சம்பளம் 20000/= - 30000/=)

**077 950 7546**

**திருமாங்கல்யம் திருமண சேவை**

தனியார் துறையில் பணிபுரியும் மணமக்கள்
செவ்வாய் தோஷம் உள்ள அரச துறை / தனியார் துறையில் பணிபுரியும் மணமகள் தேவை.

**thirumaangalyam.com**
**077 120 4651, 021 728 4433**

**பொதிகள் சேவை**

உள்நாடு, வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை.
- வெளிநாடு:- 5-7 நாட்கள்
- உள்நாடு:- 24 மணித்தியாலம்

} ஒப்படைக்கப்படும்

திருமுருகன் கொம்நெற்
077 755 4528

இல.321, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
- ✓ A-9 வீதியில் இருந்து இரண்டாவது காணி 100M தூரம்.
- ✓ கைதடி வழி பிள்ளையார் கோயிலில் இருந்து 100M மீற்றர் தூரம்.
- ✓ குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி. ✓ நன்னீரூற்று
- ✓ கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம் 300 M தூரம்
- ✓ மூன்று வழிப் பாதை மேட்டு நிலம்
- ✓ கைதடி சந்தி 500 M தூரம்
- ✓ 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ✓ 1 பரப்பின் விலை 3 லட்சம்
- ✓ பார்வையிடும் நேரம் காலை 8 மணிமுதல் மாலை 6 வரை.

(CS 1153) 1-6

**தொடர்பு: 076 658 3621**
**076 436 5814**

**தேவை**

Tution Center அமைப்பதற்கு வேண்டிய பொக்ஸ்பார் (Box Bar), L-கேடர் தகரம் மற்றும் மேலதிக தளபாடங்கள், கொட்டகைகள் விற்பனைக்கு இருப்பின் அறியத்தரவும்.

**077 430 7829**

**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில்**
**4 பரப்பு காணி விற்பனைக்குண்டு**

**நிலப்பரப்பு**
- ❖ A 32, A9 இணையும் பிரதான வீதியில் (றவுண்டப் வோட்)
- ❖ A9 பிரதான வீதியில் இருந்து 18அடி பாதையுடன்
- ❖ 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ❖ நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- ❖ வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.

**பார்வையிடும் நேரம் :**
**காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை**
தரகர் தேவையில்லை
**தொடர்புகளுக்கு : ஜெயம்**
**077 814 7389, 077 241 7589**

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் நாவற்குழி சந்திக்கு அருகாமையில் A9 வீதி முகப்புடன் 27 பரப்புக்காணி விற்பனைக்கு.
நிலப்பரப்பு.




- ✓ 3 பரப்பாகவும், 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் A9 வீதி முகப்புடன் வாகனங்கள் தரித்து நிற்பதற்குரிய பாரிய இடவசதி வீதியுடன் அமைந்துள்ளது.
- ✓ வியாபார நிலையங்கள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த நல்ல தண்ணீர் மேட்டுக் காணி.
- ✓ நாவற்குழி சந்தியிலிருந்து கைதடி செல்லும் வீதி முகப்புடன் லங்கா அசோக் லேடன் வாகன காட்சியறை நேரெதிரே அமைந்துள்ளது.
- ✓ பார்வையிடும் நேரம் : காலை 8.00 - மாலை 6.00 மணிவரை.

**077 62 34 204**
**077 28 80 152**

(CS 1153 B) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.06.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.